# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 25 புதன்கிழமை (09-08-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:187


# அரசமைப்புச் சட்டநகல் விவாதம் காலவரையறையின்றி ஒத்திவைப்பு!

முச்சந்தி முரளி



அப்ப அரசமைப்பு சீர்திருத்த நகல், தேர்தல் திருத்தச் சட்ட நகல் எல்லாமே ஒரே நாளில புஸ்வாணமாகிப் போச்சு....!

## இரண்டு காரணங்களைக் கூறி அரசாங்கம் பின்வாங்கியது

கொழும்பு,ஓகஸ்ட்9

**அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகல் மீதான விவாதத்தையும் வாக்கெடுப்பையும் அரசாங்கம் காலவரையறையின்றி நேற்று ஒத்திவைத்தது.**

**அரசமைப்புச் சீர்திருத்தத்தைக் கொண்டுவருவதில் உறுதியாகவும் விடாப்பிடியாகவும் இருந்த அரச தரப்பினர், இரண்டு காரணங்களைக் கூறி அதிலிருந்து பின்வாங்கினர். அவர்கள் எதிர்பார்த்ததுபோல மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளைப் பெறமுடியாது என்பதாலும் சிங்களத் தரப்பின் எதிர்ப்பைச் சம்பாதிக்க விரும்பாததாலும் அரசு இந்த முடிவுக்கு வந்ததாக அவதானிகள் தெரிவித்தனர்.**

*நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு இன்னும் இரண்டு வாரங்களே இருப்பதால் சட்ட நகலை விரிவாக விவாதித்து நிறைவேற்றக் கூடிய சாத்தியம் மிகக் குறைவே என்றும் அரசியல் அவதானிகள் சுட்டிக்காட்டினர்.*

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் கடந்த மூன்றாம் திகதி நாடாளுமன்றத்தில்

(12ஆம் பக்கம் பார்க்க)



அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட சமயம் அதன் பிரதிகளை ஐ.தே.க. உறுப்பினர்கள் கிழித்து எறிந்து எதிர்ப்பைக் காட்டுவதைப் படத்தில் காணலாம்.

## அலவியின் கார் மீது தாக்குதல்

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகல் மீதான விவாதத்தில் பங்கு கொள்வதற்காகச் சென்ற மாகாண சபைகள், உள்ளூராட்சித் துறை அமைச்சர் அலவி மௌலானாவின்

(12ஆம் பக்கம் பார்க்க)

புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் அங்கம் 9 உள்ளே

## பிக்குகளின் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவும்!

### பீடாதிபதிகளைச் சந்தித்துப் பேச்சு

கொழும்பு,ஓக.9

நாடாளுமன்றத்துக்குச் செல்லும் பாதையின் சுற்றுவட்டத்தில் புத்த பிக்குகள் நேற்று நடத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் கடற்றொழில், நீரியல் வளத்துறை அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷவும் கலந்து கொண்டார்.

நேற்றுமுன்தினமிரவு அவசர அவசரமாக பௌத்த பீடங்களின் பிரதம மகாநாயக்கர்களைச் சந்தித்துக் கலந்துரையாடிய அமைச்சர் நேற்று நாடாளுமன்ற விவாதத்தில் பங்குபற்றாது பிக்குகள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றினார். (இ-3)

## அரசமைப்பு சீர்திருத்த சட்ட நகல் இனி அடுத்த நாடாளுமன்றிலேயே!

கொழும்பு,ஓக.9

அரசமைப்புச் சீர்திருத்த சட்டநகல் மீதான விவாதமும், வாக்கெடுப்பும் பெரும்பாலும் அடுத்த நாடாளுமன்றத்திலேயே இடம்பெறுவதற்கான வாய்ப்பு அதிகமாக உள்ளதாக அரசாங்க உயர்வட்டாரங்களில் இருந்து அறியவந்துள்ளது.

மீண்டும் எதிர்வரும் 17 ஆம் திகதி அல்லது 22ஆம் திகதி இந்த நகல் மீதான விவாதத்தையும், வாக்கெடுப்பையும் நடத்த அரச உயர்மட்டத்தில் ஆராயப்பட்டு வருகின்றபோதும் -

(12ஆம் பக்கம் பார்க்க)



அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து பிக்குமார் மகாசபாவின் ஏற்பாட்டில் கொழும்பு புறக்கோட்டை பஸ் நிலையம் முன்பாக அரசடியில் இடம்பெற்ற சத்தியாக்கிரகப் போராட்டத்தில் பங்குகொண்ட பிக்குகளில் ஒரு பகுதியினரைக் காணலாம். பொதுமக்களும் இதில் கலந்துகொண்டனர்.

## தேர்தல் திருத்தச் சட்ட நகலும் வாக்கெடுப்பு இன்றி ஒத்திவைப்பு

கொழும்பு,ஓக9

தேர்தல் சீர்திருத்தங்களுக்கு வழி செய்யும் அரசமைப்பின் 17ஆவது திருத்தச் சட்ட நகல் மீதான 2ஆவது வாசிப்பு விவாதமும், வாக்கெடுப்பும் பிற்போடப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

அந்தத் திருத்தம் அரசமைப்புக்கு முரணானது அல்ல என உயர்நீதிமன்றம் சபாநாயகருக்கு அறிவித்ததை அடுத்து -

நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் அந்தத் திருத்தச்சட்ட நகலை நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அந்த சட்ட நகல் மீதான 2ஆவது வாசிப்பு

(12ஆம் பக்கம் பார்க்க)

## பேச்சை மீள ஆரம்பிக்க ஐ.தே.கட்சி கோருகிறது

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும்படி ஐ.தே.கட்சி அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

ஐ.தே.கவின் செயற்குழு நேற்று மாலை அவசரமாகக் கூடி இன்றைய நிலை குறித்து விரிவாக ஆராய்ந்து இந்த முடிவை எடுத்தது.

அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக மேலும் ஆராய்ந்து முடிவு எடுக்க வசதியாக உடன் பேச்சுக்களை ஆரம்பிக்கும்படியும் அதில் ஐ.தே.க தூதுக் குழு பங்குபற்றும் என்றும் - மேலும் தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## மற்றொரு ஐ.தே.கட்சி எம்.பி. அரச தரப்புக்குத் தாவினார்!

### சபையில் நேற்றும் கூச்சல், குழப்பம்

கொழும்பு,ஓக9

ஐ.தே.கட்சியின் நீண்டகால உறுப்பினரான களுத்துறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் மேர்வின் டி சில்வா நாடாளுமன்றத்தில் நேற்று நடந்த விவாதத்தின்போது பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் பக்கம் சென்று அவர்களது ஆசனத்தில் அமர்ந்தார்.

பொதுமக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் கரகோஷம் செய்து அவரை வரவேற்றனர்.

அதன்பின்னர் அரசமைப்பு சட்ட சீர்திருத்தத்தை ஆதரித்து அவர் உரை நிகழ்த்தினார். அச்சமயம் ஐ.தே.க உறுப்பினர்கள் எதிர்த்துக் குரல் எழுப்பினர். அத்துடன் மேசைக

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசமைப்பு நகலை ஆதரிப்பதா? இல்லையா?

## தடுமாற்றத்துடன் இருந்த ஐ.தே.க. எம்.பிக்கள் பத்துப் பேர் இரவோடிரவாக சிங்கப்பூருக்கு!

கொழும்பு,ஓக9

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகலை ஆதரிப்பதா அல்லது இல்லையா என்ற விவகாரத்தில் தடுமாற்றத்துடன் இருந்ததாகக் கருதப்பட்ட தனது எம்.பிக்களில் பத்துப் பேரை ஐ.தே.க தலைமைப்பீடம் நேற்று முன்தினம் இரவு சிங்கப்பூருக்கு அனுப்பிவைத்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று வாக்களிப்பு நடைபெறும் பட்சத்தில் இவர்கள் ஆதரவாக வாக்களிக்கலாம் என்ற அச்சம் காரணமாகவே இவர்கள் இரவோடிரவாக சிங்கப்பூருக்கு அனுப்பிவைக்கப்பட்டனர் என்று கூறப்படுகிறது.

நேற்றுமுன்தினம் இவர்களிடம் பாஸ்போட்டுக்களைப் பெற்றுக் கொண்ட கட்சியின் கோட்டே நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்க இரகசிய இரகசியமாக இவர்களுக்கான பயண ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# கைலாசநாதக் குருக்களின் மறைவு சிவாச்சார்ய சமூகத்துக்கு பேரிழப்பு!

## சர்வதேச இந்துமத பீடம் இரங்கல்

கொழும்பு,ஓக.9

பேராசிரியர் கலாநிதி கா.கைலாசநாதக்குருக்களின் மறைவு சிவாச்சார்ய சமூகத்துக்கும் சைவ உலகுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும்.

பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்களின் மறைவு குறித்து சர்வதேச இந்துமத குருபீடத்தின் தலைவரும், சபரிமலை ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதியுமான கலாநிதி ஸ்ரீ ஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் விடுத்துள்ள இரங்கல் செய்தியில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அமரர் கா.கைலாசநாதக் குருக்கள் நல்லூரிலும் பின்னர் கொழும்பிலும் குருகுலம் அமைத்து அந்தணச் சிறார்களுக்கு வேத ஆகமங்கள், கிரியா தத்துவங்களைக் கற்பித்தவர். நவராத்திரி காலங்களில் ஸ்ரீ சக்கர யந்திரப் பூஜையை விதிமுறை தவறாது நியமிப்பதுடன், அபார பக்தியுடன் நவமாவரண பூஜையை செய்து தன்னிகரற்ற ஸ்ரீ சக்கர பூஜா துரந்தரராகவும் விளங்கியவர்.

பல்கலைக்கழகத்தில் குருக்களிடம் கல்வி பயின்ற பலர் இன்று ஆசிரியர்களாகவும், பேராசிரியர்களாகவும் விளங்குகின்றனர். குருகுலத்தில் வேதம், ஆகமம் பயின்ற மாணவர்கள் பலர் இன்று லண்டன், மலேசியா, ஜேர்மனி, சுவிஸ் போன்ற உலக நாடுகளில் சிவாச்சாரியர்களாக விளங்குகின்றனர்.

குருக்களின் மறைவு எமக்கு அதிர்ச்சியையும் கவலையையும் தருகின்றது. அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம். - என்றுள்ளது. (க)

# ஆதீன முதல்வர் இரங்கற் செய்தி

யாழ்ப்பாணம்,ஓக.9

எமது சமயத்தின் குருமார் பாரம்பரியத்தில் தனித்துவமான ஓர் இடத்தை வகித்தவர் பேராசிரியர் கா.கைலாசநாதக் குருக்கள். இவர் சிறந்த கல்விமானாக மட்டுமன்றி ஆலயக் கிரியைகளை நடத்துவதிலும் தலைசிறந்து விளங்கினார். அவரது இழப்பு எமக்கு மக்களுக்கு ஈடுசெய்ய முடியாத ஒன்றாகும்.

நல்லை திருஞானசம்பந்த ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தரபரமாச்சாரிய சுவாமிகள் பேராசிரியர் கைலாசநாதக்குருக்களின் மறைவு குறித்து வெளியிட்டுள்ள இரங்கற்செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

காலஞ்சென்ற குருக்கள் கல்வித்துறை ஊடாக இந்து சமய அறிவைப் பரப்பியதுடன் ஆலயக் கிரியைகளை ஆகம விதிப்படி இயற்றுவதற்கு வழிகாட்டியாகவும் திகழ்ந்தவர். ஆலயக் கிரியைகள் ஆகம முறைப்படி எதிர்காலத்திலும் நடைபெற வேண்டும் என்பதற்காகப் பல நூல்களை எழுதி வெளியிட்டுள்ளார்.

இந்து சமயத்துக்கும், எங்கள் சமூகத்துக்கும், அந்தண சமூகத்துக்கும், கல்விச் சமூகத்துக்கும் பலவகைப்பட்ட அளப்பரிய சேவைகளைச் செய்தவர் பேராசிரியர் கைலாசநாதக் குருக்கள். அவரது இழப்பு மேற் சொன்ன துறைகளில் பெரும் இடைவெளியை உண்டாக்கும் - என்று இரங்கல் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-10)

# குப்பி விளக்கின் தீ பரவி குடிசை முற்றாக எரிந்தது!

## கற்கோவளத்தில் சம்பவம்

நெல்லியடி,ஓக.9

இரவு வேளை குப்பி விளக்கின் சுவாலை காற்றினால் பரவியதால் ஓலைக்குடிசை ஒன்று முற்றாக எரிந்து நாசமாகியது. தீயை அணைக்கச் சென்ற இருவர் தீக்காயங்களுக்கு இலக்கானார்கள். 10 ஆயிரம்ரூபா பெறுமதியான உடுபுடைவைகள் சாம்பலாகின.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு, தும்பளை கற்கோவளத்தில் கோ.கிருஷ்ணராஜ் என்பவரின் வீட்டில் இடம் பெற்றுள்ளது.

வெளிநாட்டிலுள்ள தனது கணவருடன் தொலைபேசியில் உரையாடுவதற்குச் செல்வதற்கு ஆயத்தம் செய்த அவரது மனைவி, வீட்டினுள் குப்பி விளக்கை எரியவிட்டுச் சென்றதாகவும், அரைமணி நேரம் கழித்து மீண்டும் அங்கு வந்த சமயம் ஓலைக்குடிசை முற்றாக எரிந்து காணப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

குடிசையில் பரவிய தீயை அணைக்க இராணுவத்தினரும், அயலவர்களும் முயற்சித்த போதிலும் அது பலனளிக்கவில்லை. அவ்வேளை இதே இடத்தைச்சேர்ந்த தணிகாசலம் ஜெயக்குமார் (வயது 38), க.பத்மநாதன்(வயது32) ஆகிய இருவரும் தீக்காயங்களுக்கு இலக்காகி மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ-109)

## சங்கக் கிளைகள் திறப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9

சாவகச்சேரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இடம்பெயர்ந்த மக்களின் நலன் கருதி இன்று புதன் கிழமை கிளை நிலையங்களைத் திறக்கவுள்ளது.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மானிப்பாய் வீதி உரும்பிராயில் கந்தன் வர்த்தக நிலையத்தில் தமது கிளை இலக்கம் 11ஐயும் -

கரவெட்டி பிரதேச செயலர் பிரிவில் துன்னாலையில் கிளை இலக்கம் 12ஐயும் திறந்து வைக்கவுள்ளது.


ஏற்கனவே சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மானிப்பாய் ஆலடிச்சந்தியில் கிளை இலக்கம் 10ஐயும் சங்கம் திறந்துள்ளது.


க.பொ.த. உயர்தர மாணவர்கள்

அனைவரதும் அவசர வேண்டுகோளுக்கிணங்க வெளிவந்து துரித விற்பனையில்....

பொதுச் சாதாரணப் பரீட்சை வழிகாட்டி நூல்

ஆக்கியோர்:
P.உமாசங்கர் &
P.கமலதாசன்



கிடைக்குமிடங்கள்:
★ பூபாலசிங்கம் புத்தகசாலை
★ ஸ்ரீலங்கா புத்தகசாலை

வெளியீடு:
முன்னோடிப் பரீட்சைகள் நிறுவனம்,
யாழ்ப்பாணம், இலங்கை. (77122)



**கண்டெடுத்தவர்கள் ஒப்படைத்து உதவவும்**

08-08-2000 அன்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பயணிகள் கப்பலில், மானிப்பாய் வீதி, உடுவிலைச் சேர்ந்த செல்வி சிற்றம்பலம என்பவரது உடைகள் அடங்கப்பெற்ற கறுப்புநிற Bag பயணம் செய்த பஸ்ஸில் தவறிவிட்டது.

கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து செல்வி சிற்றம்பலம், C/o எஸ்.பாலரட்ணம், மானிப்பாய் வீதி, உடுவில் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும்.

(77135) – செல்வி சிற்றம்பலம்



அபர்ணாலயா நுண்கலைக் கல்லூரி

* சங்கீதம் * நடனம்
* ஓகன்

வகுப்புகள் ஆரம்பம்

புதிய பிரிவு:-
12-08-2000
சனி, ஞாயிறு - பி.ப. 2-30

(கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் அருகில்)

(77138)



நாளை ஆரம்பம்!

கணக்கீடு
திரு. S. தவா
B.Com. (Hons (Acc - Spe)

A/L 2001
ஒப்படைக்கணக்கு
3.00 p.m.

திகழ் கல்வி நிறுவனம்
இணுவில்.

(C/12442)



SALE!

2000 ஆண்டு எம்மால் வெளியிடப்பட்ட புலமைப்பரிசில் வினாத்தாள்
50% கழிவு

BOND,
யாழ்நகர். (77136)



ராஜா
(யாழ்ப்பாணம்)
மீண்டும் இரண்டு நாள்கள் மட்டுமே!
எம்.ஜி.ஆர்.,
ஜெயலலிதா
மற்றும் பலர் நடிப்பில்

குடியிருந்த கோயில்

காட்சிகள்:
10.30, 2.00 (புதிய நேரம்)

ரசிகர்களே!
11-08-2000 முதல்

சுபாஸ்

(C/12325)



நாகம்ஸ்
சுன்னாகம்.
17–08–2000 வரை
ரஜனி, சௌந்தர்யா,
நடிப்பில

படையப்பா

(ரீகஸ்)
காட்சிகள்:
11.00, 2.30 (புதிய நேரம்) (77139)


# இணக்கம் கண்ட பிரதான அம்சங்கள் சட்டநகலில் மாற்றப்பட்டுள்ளன

## சபையில் ரணில் தெரிவிப்பு

கொழும்பு,ஓக.9

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் குறித்து எமக்கும் அரசாங்கத்துக்கும் இடையில் இணக்கம் காணப்பட்ட பிரதான அம்சங்கள் பல சட்டநகலில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. இது பெரும் ஏமாற்றத்தையே எமக்குத் தந்துள்ளது.

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் குறித்த விவாதம் நாடாளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது அதில் கலந்து கொண்டு தமது கட்சியின் நிலைப்பாடு குறித்து அறிக்கை வெளியிட்டு உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிறைவேற்று அதிகாரம கொண்ட ஜனாதிபதி முறையை ஒழிப்பதற்கான காலம் குறித்து கருத்தொற்றுமை காணப்படவில்லை. ஆனால் சட்ட நகலில் ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்பதற்கான கால எல்லை குறிப்பிடப்பட்டுள்ளது.

வடக்கு-கிழக்குக்கான இடைக்கால நிர்வாக சபையின் பதவிக் காலம் 5 ஆண்டுகள் என பேச்சுக்களில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதுவும் சட்டநகலில் மாற்றப்பட்டுள்ளது.

ஐ.தே.கட்சியைப் பொறுத்தவரை போரை முடிவுக்குக் கொண்டு வரக்கூடிய அரசியல் தீர்வு ஒன்றே தேவை. அந்தத் தீர்வுக்காக அரசாங்கத்துடன் நாம் பேச்சுக்கள் நடத்தினோம்.

இவ்வாறு ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார். (ஐ-7-6)

# எழுதுநர் சேவை நியமனம் கிடைக்காதோர் ஊர்வலம்

## ஈ.பி.டி.பிக்கு மகஜர் கையளிப்பு

யாழ்ப்பாணம்,ஓக.9

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் எழுதுநர் மற்றும் அதனோடு இணைந்த சேவைகளுக்கு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டு இதுவரை நியமனம் வழங்கப்படாதவர்கள் உடனடியாக நியமனம் வழங்கக் கோரி நேற்று முன்தினம் நகரில் ஊர்வலம் ஒன்றை நடத்தினர்.

காலை 10 மணியளவில் நகரில் உள்ள டி.எம்.ஐ. கல்வி நிலையத்தில் ஒன்று கூடிய இவர்கள் அங்கிருந்து ஈ.பி.டி.பி அமைப்பின் யாழ். மாவட்ட அலுவலகம் வரை ஊர்வலமாகச் சென்று அங்கு நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி யின் செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தாவுக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றை யாழ். மாவட்ட பிரதி அமைப்பாளர் எஸ். நிசாந்தனிடம் கையளித்தனர்.

சுமார் 100 பேர்வரையில் இந்த ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.


# அந்தியேட்டி அழைப்பு



திருமதி செல்லத்துரை பாக்கியம்

அன்புடையீர்!

11-07-2000 அன்று இறைபதமெய்திய எமது குடும்ப ஒளிவிளக்கு

**திருமதி செல்லத்துரை பாக்கியம்**

அவர்களது அந்தியேட்டி சபிண்டீகரணக் கிரியைகள் நாளை (10–08–2000) வியாழக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும். அவ்வேளை தாங்களும் சமுகம்தந்து தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- குடும்பத்தினர்.

கேணியடி,
திருமகள் சோதி வீதி,
நவிண்டில். கரவெட்டி. (C/12440)


# மரண அறிவித்தல்கள்


## ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை

(சிங்கம்)

பாஷையூரைச் சேர்ந்த ஞானப்பிரகாசம் சூசைப்பிள்ளை (சிங்கம்) அவர்கள் 05-08-2000 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.
இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தற்காலிக முகவரி:
அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை. (77127)

தகவல்:
செ.பாலேந்திரா



## திருமதி பேரம்பலம் காசிப்பிள்ளை

(மரக்கறி வியாபாரி, சாவகச்சேரி சந்தை)

மீசாலை வடக்கைச் சேர்ந்த திருமதி பேரம்பலம் காசிப்பிள்ளை நேற்று (08-08-2000) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் மு.பேரம்பலத்தின் அன்பு மனைவியும், சுசிலா, கோபாலகிருஷ்ணன், செல்வி, கண்ணன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(09-08-2000) புதன்கிழமை காலை 9 மணிக்கு கரவெட்டி தபால் நிலையத்துக்கு முன் ஒழுங்கையிலுள்ள இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.பேரம்பலம் (கணவர்);
கோபால் (மகன்).

(C/12443)

# இந்தோனேசிய மாநில மக்கள் தன்னாட்சியை ஏற்பதற்கு மறுப்பு

## விடுதலைப் போராட்டத்தை மழுங்கடிக்கும் திட்டமாம்

ஜகார்த்தா,ஒகஸ்ட்9

**இரியன் ஜாயா மாநிலத்துக்கு சிறப்புத் தன்னாட்சி உரிமை வழங்க இந்தோனேசிய அரசு முடிவு செய்துள்ளதை தனி நாட்டுக் கோரிக்கையை மழுங்கடிக்க இந்தோனேசியா அரசு செய்யும் தந்திரம் என்று கூறி, இரியன்ஜாயா விடுதலை அமைப்புக்கள் ஏற்க மறுத்துள்ளன.**

பப்புவா நியூகினியாவின் ஒரு பகுதியில் அமைந்துள்ளது இரியன் ஜாயா. 1963ஆம ஆண்டு இந்தோனேசியா, இரியன்ஜாயாவை ஆக்கிரமித்து தனது ஆட்சிக்குட்பட்ட மாகாணமாக மாற்றிக் கொண்டது.

அன்று முதல் இரியன்ஜாயா மக்கள் தமது உரிமைக்காகத் தனிநாடு கோரிப் போராட்டம் நடத்தி வந்தனர். இவர்களைப் போலவே போராட்டம் நடத்தி வந்த கிழக்குத்திமோர் விடுதலை அடைந்ததை அடுத்து இரியன்ஜாயாவிலும விடுதலைப் போராட்டம் தீவிரமடைந்து வந்தது.

இந்த நிலையில் இந்தோனேசிய அரசு தற்போது இரியன்ஜாயாவுக்கு சிறப்புத் தன்னாட்சி உரிமையை வழங்க முன்வந்துள்ளது.

ஆனால் தன்னாட்சி உரிமையை ஏற்க இரியன்ஜாயா விடுதலை அமைப்புகள் மறுத்து வருகின்றன. தமது சுதந்திரப் போராட்டம் தீவிரம் அடைந்து வரும் சமயத்தில், அச்சமடைந்துள்ள இந்தோனேசிய அரசு




போராட்டத்தை மழுங்கடிப்பதற்காக தன்னாட்சி உரிமை வழங்க முன்வந்துள்ளதாக அந்த அமைப்புகள் குற்றஞ்சாட்டியுள்ளன.

4 லட்சத்து 23 ஆயிரம் சதுர கிலோமீற்றர் பரப்பளவு கொண்ட இரியன் ஜாயாவில் 17 லட்சத்து 97 ஆயிரம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-ஒ)

## புகைப்பழக்கத்தால் 9 வினாடிகளுக்கு ஒருவர் மரணம்

சிக்காக்கோ,ஒக.9

உலகில் புகையிலை உபயோகிப்பவர்கள் 9 வினாடிகளுக்கு ஒருவர் என்ற வீதத்தில் மரணமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்காவில் உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்றுவரும் 11ஆவது புகையிலை தொடர்பான மாநாட்டில் இத்தகவல் வெளியிடப்பட்டுள்ளது. (ஒ)

## ஹர்த்தாலால் மேற்குவங்கம் ஸ்தம்பிதம்

கூர்க்கா மாநில விடுதலை முன்னணி அழைப்பு விடுத்திருந்த 48 மணிநேர ஹர்த்தால் போராட்டத்தால் மேற்குவங்க மாநிலத்தில் பிரதான நகரங்கள் பலவற்றில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டது.

மேற்குவங்க மாநிலத்தில் கூர்க்கா இனமக்கள் அதிகம் வாழும் பகுதிகளை இணைத்து புதிய மாநிலம் ஒன்றை உருவாக்கும் கோரிக்கையை வலியுறுத்தி ஹர்த்தால் நடத்தப்படுகிறது. (ஒ)

## வீரப்பனின் நிபந்தனைகளும் முதல்வர்களின் பதில்களும்

நடிகா ராஜகுமார் உட்பட கடத்திய 4 பேரையும் விடுவிக்க சந்தன மரக்கடத்தல் வீரப்பன் விதித்த நிபந்தனைகளும், அவற்றிற்கு இருமாநில முதல்வர்கள் கூட்டாக அளித்த பதில்களும் இங்கே தரப்பட்டுள்ளன.

✪ **வீரப்பனைப் பிடிக்க அமைக்கப்பட்ட சிறப்பு அதிரடிப்படையின் அத்து மீறல்கள் குறித்து விசாரணைக் குழு அமைத்தல் மற்றும் அதிரடிப்படையால் கற்பழிக்கப்பட்டவர்களுக்கும் உயிரிழந்தவர்களுக்கும் தலா 10லட்சம் ரூபாவும் பாதிப்படைந்தவர்களுக்கு தலா 5லட்சம் ரூபாவும் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.**

○ அதிரடிப்படையின் அத்து மீறல் குறித்து விசாரித்துவரும் குழுவின் மீதான தடையைநீக்கி தொடர்ந்து விசாரணை நடத்தி அதன் பரிந்துரையின் பேரில் நஷ்டஈடு வழங்கப்படும்.

✪ **கர்நாடகாவில் தமிழை அலுவலக மொழியாக அறிவிக்க வேண்டும்**

○ ஏற்கனவே மத்திய அரசு ஆணைப்படி சிறுபான்மையினர் 15 வீதத்துக்கு மேல் உள்ள பகுதிகளில் அரசு உத்தரவுகள் அவர்களின் மொழியிலும் அறிவிக்கப்படுகிறது. இது அனைத்து மாநிலங்களுக்கும் பொருந்தும்.

✪ **கன்னடர்களின் எதிர்ப்பினால் இதுவரை அமைக்கப்படாத திருவள்ளுவர் சிலை பெங்களூரில் நிறுவப்பட வேண்டும். அத்துடன் கன்னடக் கவிஞர் பர்வேஜனாவின் சிலையை சென்னையில் அமைக்க வேண்டும்.**

○ இரு இடங்களிலும் சிலைகள் அமைக்க ஒப்புக் கொள்ளப்பட்டது

✪ **தமிழகத்துக்கு காவேரி நதியில் 205 டி.எம்.சி.தண்ணீரை கர்நாடகம் திறந்துவிட வேண்டும்.**

○ இதற்காக மத்திய அரசு அமைத்துள்ள காவிரி நதி நீர் ஆணையம் 205 டி.எம்.சி நீரை கர்நாடகம் திறந்துவிடவேண்டும் என்று முன்னரே உத்தரவிட்டு, அதனை செயற்படுத்தவும் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

✪ **1991ஆம் ஆண்டில் காவிரி பிரச்சினை குறித்த கலவரத்தின் போது பாதிக்கப்பட்ட கர்நாடகத் தமிழர்களுக்கு நஷ்டஈடு வழங்கவேண்டும்.**

○ ஓய்வுபெற்ற மூன்று நீதிபதிகள் குழு 91 கலவரம் குறித்து விசாரணை நடத்தி வருகிறது. அதன் பரிந்துரையின் பேரில் நஷ்டஈடு வழங்கப்படும்.

✪ **வீரப்பனுக்கு உதவியதற்காக ஏழு ஆண்டுகளாக கர்நாடகச் சிறையில் உள்ள 51 பேரும் தமிழகத்தில் உள்ள 5 பேரும் விடுதலை செய்யப்பட வேண்டும்.**

○ கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டது.

✪ **சமீபத்தில் கர்நாடகாவில் கொல்லப்பட்ட 9 தலித்துக்களின் குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டும்.**

○ உடனடியாக பரிசீக்கப்பட்டு நஷ்டஈடு வழங்கப்படும்.

✪ **நீலகிரி மாவட்டத்தில் அரசு விவசாயிகளிடம் வாங்கும் ஒரு கிலோ பச்சைத் தேயிலைக்கு 15 ரூபா விலை நிர்ணயம் செய்யவேண்டும்.**

○ சமீபத்தில் பச்சைத் தேயிலையின் விலை கிலோவுக்கு 9ரூபா 50பைசாவாக உயர்த்தப்பட்டுள்ளது.மேலும் உயர்த்துவது குறித்து பரிசீலிக்கப்படும்.

✪ **தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு 150ரூபா ஊதியம் வழங்கவேண்டும்.**

○ தற்போது தமிழகத்தில் நாள் ஒன்றுக்கு படிகள் உட்பட 139ரூபா ஊதியம் தேயிலை தொழிலாளர்களுக்கு வழங்கப்படுகிறது. மேலும் அதிகரிக்க பரிசீலனை செய்யப்படும். (ஒ)

## தமிழ்நாடு விடுதலை ராணுவத்துடன் விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பு!

### இந்திய அதிகாரிகள் குற்றச்சாட்டு

சென்னை,ஒக.9

சந்தனக் கடத்தல் வீரப்பனுக்கு ஆதரவு வழங்குவதாகக் கூறப்படும் தமிழ் நாடு விடுதலை இராணுவத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையே தொடர்பு இருப்பதாக இந்திய அதிகாரிகள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

கன்னட நடிகர் ராஜ்குமாரைக் கடத்தியபின்னர் வீரப்பன் விடுத்துள்ள நிபந்தனைகள் அரசியல் சார்புடையவை எனத் தெரிவித்த அதிகாரிகள், தமிழ் நாடு விடுதலை இராணுவம் இதன் பின்னணியில் இருக்கக் கூடும் என்று கூறினர்.

1980 இல் உருவான தமிழ்நாடு விடுதலை இராணுவத்திற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் போர்ப்பயிற்சி அளித்ததாக கூறியுள்ள அதிகாரிகள் வீரப்பனின் நிபந்தனைகளால், அவருக்கு தனிப்பட்ட லாபம் எதுவுமில்லை, தவிர தமிழ்நாடு விடுதலை இராணுவத்தின் பிரசுரங்களில் கோரப்பட்ட பல விடயங்கள் நிபந்தனைகளில் இடம்பெற்றுள்ளன. ஆகவே வீரப்பனின் கடத்தல் பின்னணியில் தமிழ்நாடு விடுதலை இராணுவம் இருக்கலாம் என்று சந்தேகம் எழுப்பியுள்ளனர். (ஐ-ஒ)

## தொழிலாளி கொலையுண்டது தொடர்பாக 'புதிய தமிழகம்' தலைவருக்கு பிடியாணை



சென்னை,ஒக.9

மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளி ஒருவர் கொலை செய்யப்பட்டது தொடர்பான வழக்கில் சட்டமன்ற உறுப்பினரும் புதிய தமிழகம் கட்சித் தலைவருமான டாக்டர் கிருஷ்ணசாமிக்கு பிணையில் வர முடியாத கைது ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கொலை செய்யப்பட்ட தொழிலாளியின் மனைவி சென்னை உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவின் பேரில் இந்த உத்தரவு விடுக்கப்பட்டது.

கடந்த ஆண்டு பெப்ரவரி மாதம் டாக்டர் கிருஷ்ணசாமியைக் கைது செய்யும்படி பிறப்பித்த ஆணையை இதுவரை பொலீஸார் நிறைவேற்றாததைக் கண்டித்த நீதிபதி, கிருஷ்ணசாமி கைதுசெய்யப்பட்டால் தனக்கும், தனது உடைமைகளுக்கும் ஆபத்து ஏற்படும் என்று வழக்கைத் தாக்கல் செய்த கொலையானவரின் மனைவி அச்சம் தெரிவித்ததை அடுத்து அவருக்குப் பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்யும்படி பொலீஸாருக்கு உத்தரவிட்டார்.

1998ஆம் ஆண்டு மாஞ்சோலை தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்டத்துக்கு கிருஷ்ணசாமி ஆதரவளித்து நெறிப்படுத்திய காலகட்டத்தில், அங்கு தொழிலாளி ஒருவர் படுகொலை செய்யப்பட்டார். அந்தக் கொலைக்கு கிருஷ்ணசாமியே தூண்டுகோலாக இருந்ததாக அவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது. (ஒ)

### பாகிஸ்தானை பேச்சில் இணைக்க கோரிக்கை

## அரசு - முஜாஹிதீன் இடையிலான பேச்சைத் தொடங்குவதில் தடங்கல்

ஜம்மு,ஒக.9

காஷ்மீர் குறித்து மத்திய அரசுக்கும், யுத்த நிறுத்தம் செய்துள்ள ஹிஸ்புல் முஜாஹிதீன் இயக்கத்துக்கும் இடையேயான பேச்சு வார்த்தைகள் தொடங்குவதில் நிச்சய மற்ற நிலை ஏற்பட்டுள்ளது. பேச்சுக்களில் பாகிஸ்தானையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்ற முஜாஹிதீனிகளின் கோரிக்கையை இந்தியா முற்றாக மறுத்ததை அடுத்தே இந்த நிலை தோன்றியுள்ளது.

### உலக அரங்கில்

நாடாளுமன்றத்தில் பிரதமர் வாஜ்பாய் உரையாற்றுகையில்-

பேச்சுக்கள் நடத்த எந்த நிபந்தனைகளையும் அரசு ஒப்புக்கொள்ளவில்லை என்றும் -

பாகிஸ்தானை இதில் சேர்க்க முடியாது என்றும் - தெரிவித்தார்.

இதேசமயம்-

ஹிஸ்புல் முஜாஹிதின்களின் தலைமைத் தளபதி அப்துல் மஜீத்தர் வெளிநாட்டு செய்தி நிறுவனம் ஒன்றுக்கு வழங்கிய பேட்டியில் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக முன்னர் பல தடவைகள் பாகிஸ்தானுடன் பேச்சு நடத்தியுள்ள இந்தியா இப்போது ஏன் மறுக்கவேண்டும் என்று கேள்வி எழுப்பியுள்ளார்.

இந்திய அரசு தனது நிலையைத் தெளிவுபடுத்த வேண்டும் என்றும்-

அதன்பின்னர் தனது நிலையை மாற்றினால்,தாமும் அவ்வாறே தமது நிலைப்பாடுகளை மாற்றநேரிடும் என்றும் -

எச்சரித்துள்ளார்.

பேச்சுக்களில் பாகிஸ்தானும் கலந்து கொள்ள வேண்டும் என்ற கோரிக்கையால் காஷ்மீரில் அமைதியை ஏற்படுத்தும் வாய்ப்புகள் மங்கி வருவதாகக் கருதப்படுகிறது. (ஒ)

## வீரப்பனுக்காக 'தடா' சட்டத்தில் திருத்தம் கொண்டு வரவும் தயார்

### கர்நாடக முதல்வர் அறிவிப்பு



பெங்களூர்,ஒக.9

சந்தனமரக்கடத்தல்காரன் வீரப்பன் மீது கர்நாடக அரசு தாக்கல் செய்துள்ள பிணை வழங்க முடியாத தடா வழக்குகளில் - சட்டத்தில் திருத்தம் செய்து - பிணைவழங்கி வீரப்பனைப் பாதுகாப்பாகத் தமிழகத்துக்கு அனுப்பி வைக்கத் தயாராக உள்ளதாக கர்நாடக முதல்வர் எஸ்.எம்.கிருஷ்ணா கூறியுள்ளார்.

வீரப்பனின் நடவடிக்கை குறித்து ஆலோசனை நடத்த அனைத்துக்கட்சிக் கூட்டத்துக்கு அரசு அழைப்பு விடுத்துள்ளதாக - முதல்வர் மேலும் தெரிவித்தார்.

இரு மாநில முதல்வர்களும் கூட்டாக அளித்த பதில்களை வீரப்பன் பரிசீலித்து வருவதாகவும் - கடத்தப்பட்டவர்களுடன் வீரப்பன் தங்கியுள்ள பகுதியில் பலத்த மழை பெய்துவருவதால் நக்கீரன் கோபால் நேரடியாக அவரைச் சந்திக்க முடியாத போதும், வீரப்பனின் ஆள் மூலம் தகவல்களைப் பரிமாறி வருவதாகவும், நக்கீரன் பத்திரிகை இணை ஆசிரியர் காமராஜ் சென்னையில் தெரிவித்தார். (ஒ)

### ஓரினச்சேர்க்கை வழக்கில்

## முன்னாள் துணைப் பிரதமருக்கு மலேசியாவில் 9 ஆண்டு சிறை



கோலாலம்பூர்,ஒக.9

மலேசியாவில் முன்னாள் துணைப்பிரதமர் அன்வர் இப்ராகிமுக்கு ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட குற்றத்திற்காக நீதிமன்றம் 9 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது.

கடந்த 14 மாதங்களாக நடைபெற்றுவந்த விசாரணையின் பின்னர் அன்வர் குற்றவாளியாகத் தீர்மானிக்கப்பட்டு தண்டனை விதிக்கப்பட்டது.

1999ஆம் ஆண்டு ஊழல் வழக்கில் அன்வருக்கு வழங்கப்பட்ட 6 ஆண்டுகள் சிறைத்தண்டனையின்பின் தற்போது விதிக்கப்பட்ட தண்டனைக் காலம் தொடங்கும் என்று தீர்ப்பில் கூறப்பட்டுள்ளது.

இதனால் அன்வர் குறைந்தது 15 ஆண்டுகளுக்கு மலேசிய அரசியலில் இருந்து அகற்றப்பட்டுள்ளார்.

மலேசியப்பிரதமர் மகதீர் முகமதுவின் நெருங்கிய தோழராக விளங்கிய அன்வர், பிரதமருடன் ஏற்பட்ட பிணக்குகளின் பின்னர், பல வழக்குகளுக்கு உட்படுத்தப்பட்டு தண்டனைகள் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

# மக்கள் வெளியேறிய வீடுகளிலிருந்து பொருள்கள் அபகரிக்கப்படுகின்றன

## யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அறிக்கை

யாழ்ப்பாணம் ஒக. 9

போர் நடைபெறும் பகுதிகளுக்கு அண்மையிலுள்ள கிராமங்களிலிருந்து மக்கள் வெளியேறிய வீடுகளில் இருந்து பெறுமதியான வீட்டுப் பாவனைப் பொருள்கள் எடுத்துச் செல்லப்படுகின்றன என்று யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தினால் வெளியிடப்பட்ட ஜூலை மாத நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

யுத்த சூழ்நிலை காரணமாக மக்கள் வெளியேறிய பகுதிகளைச் சேர்ந்த வீடுகளில் உள்ள பொருள்கள் இனங்காணப்படக் கூடிய சிலரால் எடுத்துச் செல்லப்படுகின்றன. இதனை அந்தப் பகுதி மக்கள் நன்கு தெரிந்திருந்தும் தமது பாதுகாப்பு கருதி இது தொடர்பான தகவல்களை வெளியிட முடியாத நிலையில் உள்ளனர்,

ஐந்து அங்கத்தவர்களைக் கொண்ட ஒரு குடும்பத்துக்கு போஷாக்கு குறைந்த சாதாரண உணவுக்கு மட்டும் மாதத்துக்கு 5 ஆயிரம் ரூபா தேவைப் படுகிறது ஆனால் ஆயிரத்து 260 ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொருள்களே அரசினால் இந்தக் குடும்பத்துக்கு நிவாரணமாக வழங்கப்படுகிறது.

இந்த நிவாரணம் அவர்களுடைய உணவுத் தேவையில் நான்கில் ஒரு பங்கை மட்டுமே பூர்த்தி செய்கின்றது. எனவே வருமானத்தை மேம்படுத்தும் நடவடிக்கைகளில் இவர்கள் ஈடுபடாது விட்டால் இவர்களுக்கு தேவையான 5 ஆயிரம் ரூபா பெறுமதியான உணவில் மீதி 3 ஆயிரத்து 740 ரூபாவுக்கான உணவுத் தேவையை ஈடுசெய்ய முடியாத நிலை இவர்களுக்கு ஏற்படும்.

பாதுகாப்பு பிரிவினரின் பலதரப்பட்ட பாதுகாப்பு தடைகளினால் வேலை வாய்ப்புகள் அற்ற நிலை காணப்படுகிறது. மீன்பிடி, விவசாயம் உட்பட பல தொழிற்றுறைகள் இதனால் பாதிப்படைந்துள்ளன.

இதனால் பெரும்பாலான மக்கள் தமது மூன்று நேர உணவில் ஒரு நேர அல்லது இரண்டு நேர உணவைத் தவிர்த்து வருகின்றனர்

இந்த மக்களுக்கு உதவும் வகையில் சர்வதேச முகவர் நிறுவனங்கள் எந்தத் திட்டத்தையும் அமுல்படுத்தவில்லை அத்துடன் வெளிநாட்டுச் செய்தி ஊடகங்களிலும் இதனை வெளியிடுகின்றார்கள் இல்லை. இதற்கான காரணம் எதுவும் தெரியவில்லை. இதனால் கொழும்பிலும் வெளியிடங்களிலும் இந்தப் பிரச்சினை பற்றி தெரியாமல் விடுகின்றது.

இடம் பெயர்ந்த மக்களின் போஷாக்கு நிலைமை மிக மோசமாக இருக்கின்றது. குறிப்பாக குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார், பாலூட்டும் தாய்மார் போன்றோரின் போஷாக்குத்தரம் மிகக்குறைவாக இருக்கின்றது.

கடந்த நான்கு வருடங்களில் ஒரு தடவை மட்டுமே திரிபோஷா மா வழங்கப்பட்டுள்ளது.

இந்த திரிபோஷா மாவுக்கு மாற்றீடாக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சத்துணவு மாவினை பயன்படுத்தலாம் என்று சர்வதேச முகவர் நிறுவனங்கள் ஆலோசனை வழங்கியுள்ளபோதிலும் இந்தத் திட்டம் எதுவும் இங்கு நடைமுறைப்படுத்தப்படவில்லை.

உலர் உணவு விநியோகத்தில் ஏற்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் பொருட்டு கிராம சேவையாளர் பிரிவு ரீதியாக நடவடிக்கைக் குழுக்களை அமைக்கும்படி யாழ். அரச அதிபரிடம் தெரிவித்திருந்தோம். இந்த ஆலோசனையை அவர் கவனத்தில் எடுத்ததாகத் தெரியவில்லை.

இந்த உலர்உணவு விநியோகம் தொடர்பான முறைப்பாடுகள் தற்பொழுதும் எமக்கு வந்துகொண்டிருக்கின்றன.

நிவாரண பெர்மிட் வழங்குவது குறித்தும் தரமற்ற அரிசி விநியோகம் குறித்தும் முறைப்பாடுகள் வந்த வண்ணமுள்ளன.

### பனை, தென்னை தறிப்பு

பாதுகாப்பு அரண்கள் அமைப்பதற்காக கூடுதலான பனை, தென்னை மரங்கள் தறிக்கப்பட்டுள்ளன. இதனால் பாதிக்கப்பட்ட மக்கள் இது தொடர்பாக எவருக்கும் முறைப்பாடு செய்ய முடியாது விரக்தியுற்ற நிலையிலுள்ளனர்.

அல்வாய் குளங்கரைப் பகுதியில் இடம்பெற்ற 80 வயது மூதாட்டி மீதான பாலியல்வல்லுறவுச் சம்பவம் மக்கள் மத்தியில் திகிலை உண்டாக்கியுள்ளது.

யாழ். இந்துக் கல்லூரி மாணவன் சஞ்சீவனின் கொலையைக் கண்டித்து குடாநாட்டு மாணவர்கள் தமது வகுப்புகளை பகிஷ்கரிப்பு செய்தனர்.

இத்தகைய கொலைகள் இனிமேலும் இந்த மண்ணில் தொடரக் கூடாது என்பதை உறுதிப்படுத்தும் வகையில் மாணவரின் இந்தப் போராட்டம் அமைந்தது

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5-9)

## சுட்டெண் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக. 9

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்குத் தோற்றும்— இடம்பெயர்ந்த — சில பாடசாலைகளின் மாணவர்களுக்கு சுட்டெண் வழங்கும் இடங்கள் தொடர்பான விவரங்களை அந்த அந்தப் பாடசாலையின் அதிபர்கள் அறிவித்துள்ளனர்.

அந்த விவரம் வருமாறு:-

★ கொழும்புத்துறை சென். ஜோசப்ஸ் வித்தியாலயம் — எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு உயரப்புலம் மெ. மி. த. க. பாடசாலையில் வைத்து.

★ மட்டுவில் கமலாசனி வித்தியாலயம், சரசாலை சரஸ்வதி வித்தியாலயம், சந்திரபுரம் ஸ்கந்தவரோதய வித்தியாலயம்— இன்று புதன்கிழமை காலை 9 மணிமுதல் நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் வைத்து.

(இ-3-53)

## நோயாளர் கப்பல் சேவை

யாழ்ப்பாணம், ஒக. 9

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் சேவை இன்று இடம்பெறவுள்ளது.

இந்தச் சேவையில் செல்லவெனப் பதிவு செய்தவர்களை காலை 7 மணிக்கு யாழ். ஆஸ்பத்திரியில் சமுகம் தரும்படி ஆஸ்பத்திரிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

(இ-3-139)

## நாடாளுமன்றத் தேர்தலில் பிரபல சிங்கள நடிகர்கள்

கொழும்பு, ஒக. 9

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரபல சிங்கள நடிக, நடிகைகள் போட்டியிடவிருக்கின்றனர்

ஐ.தே.கட்சி சார்பில் பிரபல சிங்கள நடிகர் ரவீந்திர ரண்தெனிய மற்றும் பல விருதுகள் பெற்ற பிரபல நடிகையான அனோஜா வீரசிங்க ஆகியோர் போட்டியிட முன்வந்துள்ளனர்.

கம்பஹா மாவட்டத்தில் ரண்தெனியவும் பொலனறுவை மாவட்டத்தில் அனோஜாவும் போட்டியிடவுள்ளனர்.

தற்சமயம் இந்தியாவில் தங்கியுள்ள அனோஜா நாடாளுமன்றம் கலைக்கப்பட்டதும் நாடு திரும்பி பிரசார நடவடிக்கையில் ஈடுபடுவார். (இ-3)

## இராணுவத் தலைமையகம் முல்லேரியாவுக்கு இடம்மாறும்

கொழும்பு. ஒக 9

கொழும்பு காலிமுகம் மற்றும் கொம்பனி வீதிப் பகுதிகளை உள்ளடக்கி அமைந்துள்ள இராணுவத் தலைமையகத்தை முல்லேரியாவுக்கு மாற்றும் நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டுள்ளது;

இதற்கென நாற்பது கோடி ரூபாவை வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை அமைச்சு ஒதுக்கியுள்ளது. இதற்கென மேலும் 185 கோடி ரூபா அடுத்த வருடம் ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போதைய இராணுவத் தலைமையகம் கொழும்பின் முக்கியபகுதியில் 102 ஏக்கர்களை ஆக்கிரமித்துள்ளது என்றும்

இராணுவத் தலைமையகம் முல்லேரியாவுக்கு மாற்றப்படும்போது தற்போது மக்கள் பாவனைக்குத் தடுக்கப்பட்டுள்ள 17 முக்கிய வீதிகள் பாவனைக்கு அனுமதிக்கப்படும் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

படை அதிகாரிகளுக்கு சகல வசதிகளையும் கொண்ட கட்டடத் தொகுதியை முல்லேரியாவில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டது. (இ-3)

## சமய சந்திகளில்

யாழ்- வண்ணை அருள்மிகு ஸ்ரீ வேங்கடேச வரதராஜப் பெருமாள் கோயில் நல்லூர் சிவன் கோயில் ஆகியவற்றில் நாளை வியாழக்கிழமை ஏகாதசி உற்சவம் விசேட அபிஷேகம், பூசை, ஆராதனை வழிபாடுகளுடன் நடைபெறும். (30)

★ ★ ★

இணுவில் வேம்படி ஞானவைரவர் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்று ஆரம்பமாகியது.

உற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதிவரை நடைபெறும். உற்சவத்தில் 19 ஆம் திகதி காவடி எடுக்கும் நிகழ்வு இடம்பெறும். (சு)

★ ★ ★

சாரைநகர் மணற்காடு கும்பநாயகி முத்துமாரி அம்பாள் ஆலயத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு ஆடிக்குளிர்த்தி மகா சங்காபிஷேகத்துடன் நடைபெறும்.

சங்காபிஷேக ஆரம்பக் கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறும்.

★ ★ ★

வண்ணார்பண்ணை காட்டுத்துறை ஸ்ரீ அம்பலவாண விக்கினேஸ்வரபிள்ளையார் கோவில் வருடாந்த மஹோற்சவம் எதிர்வரும் 14 ஆம் திகதி திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி 23 ஆம் திகதி வரை நடைபெற உள்ளது.

உற்சவ காலத்தில் எதிர்வரும் 18 ஆம் திகதி மாலை தண்டிகைத் திருவிழா, 21 ஆம் திகதி மாலை சப்பறத் திருவிழா என்பனவும், 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை தேர் உற்சவமும், மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறவுள்ளன.

(க-152)

## ஆவணங்கள் மீட்கப்பட்டன

யாழ்ப்பாணம், ஒக. 9

சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முக்கியமான சில ஆவணங்கள் கடந்த வாரம் கல்லூரி அதிபர் தலைமையில் சென்ற குழுவினால் எடுத்து வரப்பட்டுள்ளன. பாதுகாப்புப் படையினரின் அனுமதி பெற்றே இவை எடுத்துவரப்பட்டன. (இ-10)

## ஆங்கில விரிவுரையாளர்

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ். உயர் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு நிரந்தர ஆங்கில விரிவுரையாளர் ஒருவர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளார்.

விரிவுரையாளராக செல்வி சுகந்தி சிவலிங்கம் தனது கடமையை கடந்த மாதம் 10ஆம் திகதி ஏற்றுக்கொண்டுள்ளதாக தொழில்நுட்ப நிறுவன வட்டாரங்கள் தெரிவித்தன.

ஏற்கனவே ஆங்கில விரிவுரையாளர்களுக்கான 6 வெற்றிடங்கள் உள்ள போதிலும் ஒருவரே நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(இ-10)

## மருத்துவத்துறை: புதிய பீடாதிபதி

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவபீடத்துக்கு புதிய பீடாதிபதியாக உயிரியல் இரசாயனவியற்றுறைத் தலைவர் பேராசிரியர் செல்வி வசந்தி அரசரத்தினம் நேற்று இடம்பெற்ற பீடாதிபதி தெரிவில் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

இவர் யாழ். பல்கலைக் கழகத்தின் முதலாவது பெண் பீடாதிபதி என்ற சிறப்புக்குரியவர் ஆகிறார்.

(இ-9)

## ப.நோ.கூ.சங்க முகாமையாளரை இன்று சமுகமளிக்க அழைப்பு

### சீனிவிநியோகம் தொடர்பாக மதிப்பிட

யாழ்ப்பாணம், ஒக. 9

கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் விநியோகிப்பதற்கென 150 மெற்றிக்தொன் சீனியை புனர்வாழ்வுப் பகுதியினர் யாழ். மாவட்ட விவசாய, நுகர்ச்சிக் கூட்டுறவு சமாஜத்துக்கு வழங்கியுள்ளனர்.

இந்தச் சீனியை பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ''உ'' கார்ட் வைத்திருப்போருக்கும் நிவாரணம் பெறாத ''அ'' கார்ட் காரருக்கும் வழங்க முடிவு செய்யப்பட்டிருக்கின்றது.

அதன் பிரகாரம் சீனியைப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பகிர்ந்து வழங்குவதற்காக மதிப்பீடு ஒன்றைச் செய்யவேண்டி உள்ளதால்— பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் முகாமையாளர்களை அல்லது பிரதிநிதிகளை தத்தமது சங்கத்தில் உள்ள ''உ'' கார்ட் காரர்களின் மொத்த எண்ணிக்கை, நிவாரணம் பெறாத ''அ'' கார்ட் காரரின் மொத்தஎண்ணிக்கை ஆகிய புள்ளிவிவரங்களுடன்—

இன்று காலை கூட்டுறவு சமாஜ அலுவலகத்துக்குத் தவறாது சமுகந்தருமாறு அதன் தலைவர் சி. வி. கே. சிவஞானம் கேட்டுள்ளார்.

வெள்ளிக்கிழமை முதல் சீனி விநியோகத்தை ஆரம்பிப்பதற்கு இவர்களின் வருகை மிகவும் அவசியமானது என்றும் அவர் தெரிவித்தார். (அ)

## மின்சார தேவையை முழுமையாக நிறைவேற்ற முடியாத நிலைமை

யாழ். மாவட்டத் தேவைகளுக்கு ஏற்ப மின்சாரத்தை உற்பத்தி செய்ய முடியாமல் இருப்பதால் 5 மெகவாட் மின்சாரத்தை வெட்டவேண்டியுள்ளது என்று மின்சார சபையின் யாழ் பிராந்திய அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது:-

யாழ். மாவட்டம் முழுவதற்கும் 17 மெகவாட் மின்சாரம் தேவையாக இருக்கின்றபோதிலும் சுன்னாகத்திலிருந்து 4 மெகவாட் மின்சாரத்தையும் காங்கேசன்துறையில் உள்ள கூல்ஏயாரிலிருந்து 8 மெகவாட் மின்சாரத்தையும் உற்பத்தி செய்யக்கூடியதாக இருக்கிறது.

கூல்ஏயாரில் 11 ஜெனரேட்டர்களில் 9 மட்டும் இயங்குகின்றன. ஏனையவை திருத்தம் செய்யப்பட வேண்டும்.

இந்த மின்சார உற்பத்தியில் 5 மெகவாட் குறைவாக இருப்பதனால்தான் மின் தடையை அமுல்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இப்படி அவர் மேலும் கூறினார். இ-(5-9)

## விநியோகம்

மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் தங்கியுள்ள சிறுவர்கள், பாலூட்டும் தாய்மார் மற்றும் கர்ப்பிணிகளுக்கு போஷாக்கு நிலையை மேம்படுத்த 'யுனிசெவ்' நிறுவனத்தின் உதவியுடன் யாழ். சுகாதாரத் திணைக்களத்தினால் வாரத்தில் 3 தடவைகள் பசுப்பால் கஇலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது.

(ஒ-135)

**உதயன்**

## ஆபத்துத் தரும் சமூக விரோதிகள்

சமூக நலன் கருதாது, வேண்டாத 'வம்பு' வேலைகளைச் செய்து அடுத்தவர்களின் மனங்களை நோகச் செய்வதும், அவர்களுக்கு இம்சை செய்வதும் குடாநாட்டின் புதிய 'பண்பாக' முளைத்து வருகிறது. இளைஞர்கள் மட்டுமன்றி வளர்ந்தவர்களிடம் கூட அடுத்தவர் நலனில் அக்கறை கொள்ளும் தன்மை மிகவும் குறைந்து வருகிறது.

இந்தப் புதிய சமூக நோயினால், மக்களுக்கும் அவர்தம் உடைமைகளுக்கும் பாதுகாப்பற்ற, ஆபத்தானநிலை தோன்றுகிறது. கொக்குவில் ரயில் நிலையத்திற்கு அருகில் இரண்டு வாரங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஒரு சம்பவம் இதற்கு நல்லதோர் உதாரணமாகும்.

கொக்குவில் ரயில் நிலையத்துக்கு அணித்தாக உள்ள தொழில் நுட்பக் கல்லூரியும் அதன் சுற்றுப் புறங்களும் மிதிவெடிகள் நிறைந்த பகுதிகளாக இருந்தன. தொழில் நுட்பக் கல்லூரி வளாகம் மற்றும் விளையாட்டு மைதானம் என்பன மிதிவெடி செயற்பாட்டுக்குழு நிபுணர்களால் துப்புரவு செய்யப்பட்டன. ஆனால் சுற்றுப்புறத்தில் மிதிவெடிகள் இருக்கக் கூடுமெனச் சந்தேகிக்கப்படும் பகுதிகளில் மிதிவெடி அபாய எச்சரிக்கை அறிவித்தல் பலகைகள் நடப்பட்டிருந்தன.

ஆனால் சமூக நலனில் அக்கறை இல்லாத, அதனோடு விளையாடும் விரோதிகள் எச்சரிக்கை செய்யும் அறிவித்தல் பலகைகளைப் பிடுங்கி எறிந்து விட்டனர். அதனால், மிதிவெடி அபாயம் குறித்து அறியாத அப்பாவிப் பெண் ஒருவர், அந்தப் பகுதியில் நடந்து சென்று தமது வலது கால் பாதத்தை இழந்து விட்டார்.

மக்களின் பாதுகாப்புக் கருதி நடப்பட்ட மிதிவெடி எச்சரிக்கைப் பலகைகளைப் பல இடங்களிலும் அவ்வப்பகுதிச் சமூக விரோதிகள் அகற்றிவிட்டனர். இதனால் ஒன்றுமறியாத அப்பாவிப் பொது மக்கள் பலரும் மிதிவெடிகள் புதையுண்டுள்ள பகுதிகளில் நடந்து சென்று தமது பாதங்களை இழக்கும் ஆபத்து உருவாகியுள்ளது.

மற்றவர்களின் துன்பத்தில் ஒருவகை இன்பம் காணும் புல்லுருவிகளின் செயல்களால் மக்களில் பலர் தமது கால்களை இழக்கும் ஆபத்துக்கு ஆளாகி உள்ளனர். கால்களை இழப்பதால் ஒருவர் அனுபவிக்கக் கூடிய வேதனைகளையும் நடைமுறைக் கஷ்டங்களையும் உணர முடியாதவர்கள் அல்லர் எச்சரிக்கைப் பலகைகளை அகற்றிய அட்டூழியர்கள்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக, வடக்கில் உக்கிரம் அடைந்த போரினால் - குண்டு வீச்சினால், எறிகணை வீச்சினால், மிதிவெடிகளினால் - கைகளை, கால்களை இழந்து தவிப்போரின் எண்ணிக்கை ஏற்கனவே மிக உயர்ந்து நிற்கிறது. அதற்கும் மேலதிகமாக, வேண்டாத 'வினை' செய்து மேலும் பலரை அங்கவீனராக்கி 'வேடிக்கை' பார்ப்பதாகவே சமூக விரோதிகளின் மேற்படி செயல் அமைந்துள்ளது.

மிதிவெடிகள் மற்றும் கண்ணிவெடிகள் அகற்றும் பணியைச் செய்து வந்த ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திப் பிரிவு, தனது நடவடிக்கைகளை நிறுத்தி வைத்துள்ளது. பெரும் இக்கட்டான இவ்வேளையில் பொதுமக்களை ஆபத்தில் சிக்கவைக்கும் சமூக விரோதிகளை இனங்கண்டு, அவர்களைத் தண்டிப்பதோடு மட்டும் நிற்காமல் சமூகத்திலிருந்து ஒதுக்கியும் வைக்கவேண்டும்.

தமது சொந்த மக்கள் மீது சிறிதும் இரக்கம் இல்லாத அரக்க குணம் படைத்த விரோதிகளை சமூகம் சகித்துக் கொண்டிருந்தால் இதனைப் போன்று வேறுபல ஆபத்துக்களும் மக்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும்.

மிதிவெடி அபாய எச்சரிக்கைப் பலகைகளை அகற்றுவது குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை உண்டாக்க வேண்டும். அந்தந்தப் பகுதிக் கிராமசேவை அலுவலர்கள் ஊடாக மிதிவெடி அபாயம் உள்ள பகுதிகள் குறித்து மக்களுக்குத் தெரியப்படுத்துவது அத்தகைய நடவடிக்கைகளில் பிரதானமாக அமையலாம்.

---

### மட்டு. போராட்டத்துக்கு ஆதரவு

## யாழ். செயலக வளாகத்தில் பட்டதாரிகள் உண்ணாவிரதம்

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுள்ள சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தினால் நேற்று முன்தினம் யாழ். அரச செயலக வளவில் அடையாள உண்ணாவிரதம் நடத்தப்பட்டது.

காலை 9 மணிக்கு ஆரம்பமான இந்த உண்ணாவிரதம் மாலை 3 மணிவரை நடைபெற்றது. உண்ணாவிரதத்தின் இறுதியில் யாழ். அரச அதிபர் க.சண்முகநாதனிடம் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரினை பட்டதாரிகள் கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

மட்டக்களப்பு மாவட்ட பட்டதாரிகளினால் முன்னெடுக்கப்பட்டுள்ள உண்ணாவிரதப் போராட்டத்துக்கு தகுந்த பதில் கிடைக்க வேண்டும் என்பதனை வலியுறுத்துவதோடு யாழ். மாவட்டத்தில் வேலையற்றிருக்கும் பட்டதாரிகளுக்கும் நியமனம் வழங்குவதற்குத் துரித நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்பதனை வலியுறுத்துகின்றோம்.

பட்டதாரிகள் நியமனத்தில் தொடர்ந்தும் தாமதம் ஏற்படாமல் எமது நியமனத்திற்கு ஆவன செய்து உதவுமாறு தங்களைத் தயவுடன் கேட்டுக் கொள்கின்றோம் -என்று அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மகஜரின் பிரதிகள் ஜனாதிபதி, கல்வி, உயர்கல்வி அமைச்சு, மாகாண ஆளுநர், திறைசேரிப் பணிப்பாளர்,உலக வங்கி கொழும்புக் கிளை, மாகாண பொதுச் சேவைகள் ஆணைக்குழு, யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமுமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.

மட்டக்களப்பு மாவட்டத்தில் பட்டம் பெற்று வேலையற்றிருக்கும் 402 பட்டதாரிகளுக்கும் நிரந்தர வேலைவாய்ப்பு வழங்க வேண்டும், போட்டிப் பரீட்சை நடத்தப்படாது நேர்முகப்பரீட்சை மூலம் நியமனங்களை வழங்க வேண்டும், நியமனத் திகதியில் இருந்து பட்டதாரி சம்பளம் வழங்கவேண்டும் என்ற மூன்று கோரிக்கைகளை முன்வைத்து மட்டக்களப்பு பட்டதாரிகள் சங்கத்தினால் கடந்த 4ஆம் திகதி தொடக்கம் மட்டக்களப்பில் சாகும்வரை உண்ணாவிரதம் நடத்தப்பட்டு வருவது தெரிந்ததே. (ஐ-5-180-15-10)

## கோஷ்டி மோதலில் ஈடுபட்ட ஆறுபேர் நீதிமன்றில் ஆஜர்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ். அரசடிப் பகுதியில் கடந்த 4ஆம் திகதி இடம்பெற்ற இரு குழுக்களுக்கிடையிலான மோதல் சம்பவத்தில் சம்பந்தப்பட்டவர்கள் எனத் தெரிவித்து சந்தேகத்தின் பேரில் ஆறுபேர் நேற்றுமுன்தினம் யாழ். பொலீஸாரால் கைது செய்யப்பட்டனர்.

அரசடிப் பகுதியைச் சேர்ந்தவர்களான கிருஷ்ணன் சுதாகரன், செல்லச்சாமி ஜீவராசா, சிறீகாந்தன் றெஜினோல்ட், சின்னராசா சுகிதரன், தம்பிப்பிள்ளை விமலச்சந்திரன் மற்றும் சிவஞானம் சக்திவேல் ஆகியோரே கைது செய்யப்பட்டவர்களாவர்.

சந்தேகநபர்கள் ஆறுபேரும் பொலீஸாரால் யாழ். நீதிமன்றத்தில் நீதிவான் பா.சுப்பிரமணியம் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேக நபர்களை 5 ஆயிரம் ரூபா பிணையில் செல்ல அனுமதித்த நீதிவான் வழக்கை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு ஒத்திவைத்தார்.

இதேவேளை -

மேற்படி தாக்குதல் சம்பவத்தின் போது காயமடைந்த ஒரு பெண் உட்பட ஐந்து பேர் யாழ். வைத்திய சாலையில் சிகிச்சைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது. (ஐ-9-5)

## கூ.மொத்த விற்பனவு நிலைய ஊழியருக்கு நிரந்தர நியமனம்

யாழ்ப்பாணம்,ஓக.9

குடாநாட்டில் கூட்டுறவு மொத்த விற்பனவு நிலையத்தின் (சி.டபிள்யூ.ஈ) கிளைகளில் பணிபுரியும் தற்காலிக ஊழியர்களை நிரந்தரமாக்குமாறு ஈ.பி.டி.பி செயலாளர் நாயகமும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்த கோரிக்கைக்கு வர்த்தக அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளார்.

ஈ.பி.டி.பி. அமைப்பினால் வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பு ஒன்றில் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் குடாநாட்டில் மூடப்பட்டுள்ள அந்த நிறுவனத்தின் கிளைகளை மீள இயங்கச் செய்வதற்கும் அமைச்சர் இணக்கம் தெரிவித்துள்ளதாக அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## தென்மராட்சி ஆசிரியருக்கு புதிதாக சுயவிவரக் கோவை

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் ஆசிரியர்களுக்கு புதிதாக தனிநபர் கோவைகள் வலயக் கல்வி அலுவலகத்தினால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இடப்பெயர்வு காரணமாக வலயக் கல்வி அலுவலகத்தின் ஆவணங்களை எடுக்க முடியாத நிலையில் உள்ளதால் புதிய தனிநபர் கோவைகள் தயாரிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோரிடமுள்ள ஆவணங்களின் பிரதிகள் பெறப்பட்டு கோவைகள் தயாரிக்கப்படுவதாகவும் -

இதுவரை ஆவணங்களைச் சமர்ப்பிக்காத ஆசிரியர்கள், அதிபர்கள் தம்மிடமுள்ள ஆவணங்களின் போட்டோப் பிரதிகளை வலயக் கல்வி அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறும்- அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-117)

### மட்டக்களப்பு மாவட்டத்தில்

## வேட்பாளர் தெரிவில் தமிழ்க் கட்சிகள் மும்முரம்

மட்டக்களப்பு,ஓக.9

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆறு அங்கீகரிக்கப்பட்ட கட்சிகள் தனித்துப் போட்டியிடுவதற்கு முடிவு செய்துள்ளன.

வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் படலத்தில் அவை மும்முரமாக இறங்கியுள்ளன.

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ், ஐ.தே.கட்சி, பொது மக்கள் ஐக்கிய முன்னணி, பிரஜைகள் முன்னணி ஆகிய ஆறு கட்சிகளே தனித்துப் போட்டியிட உள்ளன.

ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ். வரதர் அணி என்பன கூட்டாகப் போட்டியிடுவது தொடர்பாக பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுள்ளன. இணக்கம் ஏற்படாவிட்டால் இவையும் தனித்துப் போட்டியிடுமெனக் கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன.

இங்கு அரச சார்பற்ற நிறுவனத்தைச் சேர்ந்த பெண்மணி ஒருவர் தலைமையில் சுயேச்சைக் குழு ஒன்றும் களத்தில் குதிக்கவுள்ளதாகப் பேச்சடிபடுகிறது. கல்குடா தொகுதியைச் சேர்ந்த இளம் பத்திரிகையாளர் ஒருவர் முக்கிய தமிழ்க் கட்சி ஒன்றின் வேட்பாளராகப் போட்டியிடலாம் என்று தெரிவிக்கப்படுகிறது. (க-6)

---

## நல்லூர் உற்சவ காலச் சிறப்பம்சம்



## உன்னை விட்டுப்போகோம்!

நித்தமுந்தன் வாசல்வந்து நெஞ்சிளகி நின்றோம்
நேரும்துன்பம் சொல்லிச் சொல்லிக் குரலடைத்துருண்டோம்
சத்தயுத்தம் நிற்கவில்லை சருகென அலைந்தோம்
உயிரைமட்டும் உடைமையாக்கிக் கொண்டுன் தாளில் வீழ்ந்தோம்.

இன்னல்கள் கணம் தொடரும் ஈனமெமக் கேனோ?
எத்தனைநாள் தீக்குளித்து நாம் துடிப்பதாமோ?
கண் திறந்து பார்த்திடாமல் கற்சிலையாய் நீயோ?
கண் சொரிந்து அபிஷேகம் செய்தெமைக் காத்திடாயோ?

பூமுடித்துப் பொட்டுமிட்டுப் பூத்து இருக்கின்றாய்!
பொன்னகைக்குள் மூழ்கிப் புன்னகைத்து முன் எழுந்தாய்!
'நேரம் பிந்திடாது' பூசைவேளை ஒளிர்கின்றாய்!
நிம்மதிக்கு ஏங்குமெம்மை மட்டுமேன் மறந்தாய்?

நல்லையூரில் உந்தனருள் எல்லையற்ற தாகும்
நாடகங்கள் ஆடிஞானம் ஊட்டுமுந்தன் நேசம்
'வல்ல உன்னால் தொல்லை தீர்ந்தோர் கோடி' என்னும் வேதம்
வன்முறை துரத்துமெம்மை... எங்கு நீயும் வேலும்?

உன்னை மட்டும் நம்பி நீறு பூசிச் சுற்றி வந்தோம்
உந்தன்தோளில் எங்கள்பாரத்தை இறக்கி வைப்போம்
உன்கை அபயம்தேடித் தஞ்சமாய்ச் சரண்புகுந்தோம்
உயிர்கனிந்தழைத்தோம் காப்பாய்... உன்னைவிட்டுப்போகோம்.

த.ஜெயசீலன்

## கண்ணருள் புரிவாய்!

| | | |
|---|---|---|
| சக்திஉமை | வந்தணைக்கக் | கந்தனென்று |
| சரவணத்தில் | நின்றவனே, | தேவர் வேண்டச் |
| சித்திஒளிர் | வேலேந்திச் | சூரர் தம்மைச் |
| சேர்த்தழித்துப் | புவிகாத்த | முருகவேளே, |
| பத்தரெல்லாம் | மனஞ்சிதறிக் | கண்ணீர் மல்கிப் |
| பதைத்துருகும் | துன்பத்தைத் | தீர்க்கொணாதோ, |
| வித்தகனே | நல்லூரில் | வீற்றிருக்கும் |
| மெய்ஞ்ஞான | பண்டிதனே | போற்றி போற்றி |
| செந்தமிழின் | வடிவோனே | நக்கீரன் சொல் |
| திருமுருகாற் | றுப்படையை | நயந்த செல்வா, |
| முந்துநரைக் | கிழவிக்குப் | பழம் கொடுத்து |
| முதுபொருளைக் | கேட்டவனே, | யாழ்நல்லூரில் |
| வந்துன்றன் | அடியவர்க்குக் | கருணை செய்யும் |
| வள்ளலே, | வள்ளிகுஞ் | சரிமணாளா, |
| சந்ததமும் | யாங்கள்படும் | துயரம் போக்கித் |
| தண்ணளிக்கண் | ணருள்புரிவாய் | போற்றி, போற்றி! |

– அருட்கவி சீ.வி.

## வருகிறான் நல்லை வீதி

கருணையே வதனந் தோன்ற
கடம்பமே மார்பு தோன்ற
கரமதில் கூர்வேல் தோன்ற
கால்களில் கழல்கள் தோன்ற
'இருமையும் அபயம் ஈதோ!'
என்றொரு கரமே தோன்ற
வருகிறான் நல்லை வீதி
வல்வினை தீர்க்கும் வேலோன்!

– புத்தூர் வே. இளையகுட்டி

## அமைதி நிலை அருள்வாய்!

குறைதீரக் குமரா உன் கழல் நாடினோம்! வள்ளிக்
குறமாதின் மணவாளா! குகனே சண்முகனேவா!
பிறைசூடும் பெருமானின் நெற்றி நயனத்துதித்தோனே!தேவப்
பெண்ணாளின் தலைவா! மஞ்ஞைதனிலேறும் முருகோனே!
உறைவோனே நல்லையிலே சக்திவடிவேல் தனைக்கொண்டு
அமரர்க்குப் புதுவாழ்வு அளித்தவனே! அற்புதனே!
நிறைவாழ்வு அளிப்பாயே நாளும் அல்லலுறும் நிலைநீக்கி
நல்லவழி காட்டிடுவாய் நானிலத்தில் அமைதிக்கே!

- நாயன்மார்கட்டு ப.மகேந்திரதாசன்

### உதயவாக்கு

செம்படவன் வலையை வீசி மீன்களைப் பிடிக்கிறான். தண்ணீரோ மீனின் பற்றைவிட்டுத் தன் போக்கில் கவலையின்றி ஓடிக்கொண்டிருக்கிறது. ஆனால் மீன் தண்ணீரின் நட்பை விடுவதில்லை. தண்ணீரை விட்டுத் தனியானதும் உயிரை விட்டு விடுகிறது. இதுவே உண்மையான நட்பு. - *நஸீம்*.

### நாளை

ஆடி 26
வியாழக்கிழமை
*திதி:* ஏகாதசி
பின்னிரவு 3.23 வரை
*நட்சத்திரம்:* கேட்டை
பிற்பகல் 2.57 வரை
ஏகாதசி விரதம்
*சுபநேரம்:* 7.34 - 9.04
*ராகுகாலம்:* 1.34 - 3.04
(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# புலமைப் பரிசில் பயிற்சிப் பரீட்சை- 2000
## வினாத்தாள் இல. 9

தரம் 5 பகுதி I நேரம் 45 நிமி.

★ **1-4 வரையுள்ள வினாக்களுக்குத் தரப்பட்ட அறிவித்தல்களுக்கு ஏற்ப விடை தருக.**

1) பின்வரும் பாடல் வரி எதனைப் பற்றி உள்ளதோ அந்த விடையினைச் சுற்றி வட்டமிடுக.

*"அதோ அதோ பறவைக் கப்பல் ஆகாயத்தில் செல்லுது*
*அதிசயமாய் எல்லோரையும் அங்கே பார்க்கச் சொல்லுது"*

1) ஒட்டகம் 2) விமானம் 3) பறவை 4) பட்டம்

2) கீழ்வரும் பாடல்வரிகள் எதனைப் பற்றி உள்ளதோ அந்த விடையின் இலக்கத்தைச் சுற்றி சதுரம் வரைக.

*"வாலைத் தூக்கி ஓடிவரும்*
*வளைந்த கொம்பை ஆட்டிவரும்"*

1) நாய் 2) பூனை 3) பசு 4) குதிரை

3) கீழ்வரும் பாடல்வரிகள் எதனைப் பற்றி கூறப்பட்டுள்ளதோ அந்த விடையினைச் சுற்றிக் கட்டமிடுக.

*காலைக் கதிரவன் வான்வரவே*
*கண்ணைத் திறந்து நான் விளித்து*
*கோல நகையைக் காட்டிடுவேன்*
*குளத்தின் அழகைக் கூட்டிடுவேன்.*


1) தாமரை 2) காகம் 3) சேவல் 4) சூரியன்

4) கீழ்வரும் பாடல் வரிகள் எதனைப் பற்றி கூறப்படுகின்றதோ அந்த விடையின் கீழ்க் கோடிடுக.

*சீனி தின்றால் இனிக்கும்*
*மாங்காய் வாயிற் புளிக்கும்*
*மிளகாய் வாயில் உறைக்கும்*
*பாக்கு நாவில் கயரும்*
*உப்புச் சுவைக்க உவர்க்கும்*

1) உணவு 2) பல்சுவை 3) வாய் 4) நாக்கு


★ **5-7 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் நான்கு படங்கள் தரப்பட்டுள்ளன. இவற்றுள் ஒன்று ஏனைய மூன்று படங்களுடன் ஏதோ ஒரு வகையில் பொருத்தமற்றது. அதனைத் தெரிவு செய்து அதன் கீழே கோடிடுக.**

5) 
1 2 3 4

6) 
1 2 3 4

7) 
1 2 3 4


★ **8-11 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் முதலில் தரப்படுகின்ற பொருளுக்குப் பிரதியீடாகப் பாவிக்கும் பொருளை தெரிந்து அதன்கீழ்க் கீறிடுக.**

8) 
1 2 3 4

9) 
1 2 3 4

10) 

1 2 3 4

11) 

1 2 3 4

★ **கீழ்வரும் கதையினை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள 12 முதல் 14 வரையான வினாக்களுக்குரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

*முருகன் ஒரு பழ வியாபாரி. ஒருநாள் பெரியவர் ஒருவர் வந்து, முலாம்பழத்தின் மேலே தன் கையை வைத்து "எவ்வளவு பெரிய முலாம்பழம்! இதற்கு என்ன விலை சொல்கிறாய் தம்பி?" என்று கேட்டார்.*

*"இந்த முலாம்பழம் ஒன்றுதான் என்னிடத்தில் எஞ்சியுள்ளது. இது நல்ல பழம் போலத் தோன்றினாலும் இதில் கொஞ்சம் பழுது இருக்கிறது ஐயா!" என்று சொல்லி அந்தச் சிறுவன் அந்தப் பழத்தை மறுபுறம் திருப்பிக் காட்டினான். அந்தப் பெரியவர் 'முருகனின் நேர்மையைப் பாராட்டினார்.*

12) இக்கதையில் முருகன் என்ற பாத்திரத்தின் குண இயல்பு

1) பணத்திற்காக ஆசைப்பட்டுப் பொய் பேசாதவன்.
2) மற்றவரை ஏமாற்றி வாழ நினைக்காதவன்.
3) பிறரை வஞ்சித்து வாழ்பவன்.

13) முருகனின் சிறுவயது பழக்கங்களை வைத்துக் கூறக் கூடிய ஒரு பழமொழி.

1) பேராசை பெரு நட்டம்.
2) விளையும் பயிரை முளையிலே தெரியும்.
3) அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு.


14) முருகன் அப்பெரியவருக்குக் கூறியது.

1) பொய் 2) மெய் 3) குற்றம்


★ **கீழே தரப்பட்டுள்ள படங்களை ஒழுங்குபடுத்தினால் ஒரு கதை உருவாகும். அக்கதை ஒழுங்குக்குரிய எழுத்துக்களை உரிய இடத்தில் எழுதுக.**

15)

அ 
( )

ஆ 
( )

இ 
( )

ஈ 
( )

★ **இல 16-19 வரையுள்ள வினாக்களில் சரியான விடையின் இலக்கத்தைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**


16) ஆகாயத்தோட்டி எனப்படும் பறவை எது?
1) கிளி 2) பருந்து 3) காகம் 4) மயில் (.......)

17) சாந்தமான (சாதுவான) மிருகம் எது?
1) புலி 2) பசு 3) நாய் 4) நரி (.......)

18) கடந்த நூற்றாண்டின் இணையற்ற கண்டுபிடிப்பு எது?
1) தொலைக்காட்சி 2) தொலைபேசி
3) வானொலி 4) கணனி (.......)

19) நெல் சேமித்து வைக்குமிடம்
1) கடை 2) வீடு 3) களஞ்சியம் 4) சந்தை (.......)

★ **இல 20-23 வரையுள்ள வினாக்களுக்கு கீழே உள்ள படவரைபை அவதானித்து விடை எழுதுக (ஆங்கில எழுத்தில் விடை தருக.)**





20) கமல் தன் வீட்டிலிருந்து பாடசாலைக்கு நடந்து சென்றால் எப்பக்கத்தால் செல்ல வேண்டும்? ..........................


21) நிமல் தன் வ் லிருந்து பாடசாலைக்கு சைக்கிளில் சென்றால் எப்பக்கத்தால் செல்லவேண்டும்? ..........................


22) பாடசாலையில் இருந்து கமல் தன் வீட்டிற்கு நடந்து சென்றால் எப்பக்கத்தால் செல்ல வேண்டும்?..........................

23) பாடசாலையில் இருந்து நிமல் தன் வீட்டிற்கு நடந்து சென்றால் எப்பக்கத்தால் செல்ல வேண்டும்?..........................

★ **இல 24-26 வரையுள்ள வினாக்களில் அடுத்துவரும் உருவினைத் தெரிந்து அதன்கீழ்க் கோடிடுக.**

24) 
.......... 1) 2) 3)

25) 
.......... 1) 2) 3)

26) 
.......... 1) 2) 3)

★ **27-29 வரையுள்ள வினாக்களில் உள்ளவற்றை ஏதோ ஒரு வரிசையில் ஒழுங்குபடுத்தும்போது நடுவில் வருவதின் கீழ்க் கோடிடுக.**

27) 1) மாகாணசபை 2) பிரதேசசபை 3) பாராளுமன்றம் 4) நகரசபை 5) மாநகரசபை

28) 1) ஆளுநர் 2) கிராமசேவகர் 3) ஜனாதிபதி 4) பிரதேசசெயலர் 5) மாவட்டச்செயலர்

29) 1) எலி 2) பூனை 3) யானை 4) நாய் 5) பசு

★ **30-32 வரையுள்ள வினாக்களில் காகிதத்தாள் துண்டுகளை பின்வரும் ஒவ்வொருவிதத்திலும் புள்ளிக்கோடுகள் வழியே மடித்து இறுதியில் வெட்டுவதன் மூலம் முக்கோணி, சதுரம், செவ்வகம் ஆகிய வடிவங்களைப் பெறலாம். இங்கு இறுதியில் பெறப்படும் வடிவம் எது என எழுதுக.**

30)  ..........................

31)  ..........................

32)  ..........................

★ **33-36 வரையுள்ள வினாக்களி**
**கோடிடுக.**

33) சிவப்பு, மஞ்சள், பச்சை
மாறிமாறி ஒரு வரிசைய
முதலாவது நிறம் சிவப்
ஆவது மின்குமிழின் நி
1) சிவப்பு 2) மஞ்சள்

34) 25 பேர் பயணம் செய்ய
எண்ணிக்கை 4 ஆகும்.
செய்தால் எத்தனை சி
1) 4 2) 8 3)

35) ஒரு பண்ணையில் ஆடு
ணிகள் உள்ளன. அவ
34 ஆகும். எனவே ஆ
1) 7 2) 6 3)

36) ஓர் எண்ணை 2 ஆல்
1ஐக் கழித்து, பின்பு 2
ஆகும். அவ்வெண் யா
1) 2 2) 10 3) 6

★ **கீழ்வரும் விடுகதைகளுக்கு**
**இலக்கத்தை புள்ளிக் கோட**

37) *இதயம்போல் துடிப்பிரு*
அது என்ன?
1) கண்
3)சூரியன்

38) *உள்ளே இருந்தால் ஓ*
*விரைவில் மடிவான்.*
1) கண்
3) மீன்

★ **சரியான விடையின் கீழ்க் கீ**

39) பல ஆண்டுகள் வாழு
1) பப்பாசி 2) வாழை

40) ஐந்து தசாப்தங்களின் நி
1) வெள்ளிவிழா 2) பொ
4) மணிவிழா

---

**பகு**

★ **கீழ்வரும் பாடலை வாசித்து**
**களுக்குரிய விடைகளைப் பு**

*ஓடி விளையாடு*
*ஓய்ந்திருக்க ல*
*கூடி விளையாடு*
*குழந்தையை*

*சின்னஞ் சிறு குரு*
*திரிந்து பறந்து*
*வண்ணப் பறவைக*
*மனதில் மகிழ்*

*கொத்தித் திரியும*
*கூட்டி விளைய*
*எத்தித் திருடுமந்த*
*இரக்கப்பட வே*

*பாலைப் பொழிந்து*
*பசுமிக நல்லதடி*
*வாலைக் குழைத்*

..........................

1) இப்பாடலைப் பாடிய கவி
2) இப்பாடல் யாருக்காகப்
..........................
3) இப்பாடலில் வரும் பறவ
..........................
4) எதற்கு இரக்கப்பட வே
..........................
5) இறுதியில் விடுபட்ட
எழுதுக.

★ **மேலேயுள்ள பாடலில் குறிப்பி**

6) 1) பெயர்ச்சொல் இரண்
i)..........................
2) இப்பாடலில் அதிக
..........................

7) இளமைப் பெயர்களை
1) கோழி - ..........................
3) பசு - ..........................

★ **ஒத்த கருத்துடைய சொல்**
8) வைதல் ..........................
10) மகிழ்ச்சி ..........................

★ **எதிர்க்கருத்துடைய சொல்**
12) மகிழ்ச்சி ..........................
14) நல்ல ..........................

★ **கீழே உள்ள சொற்களுக்கு**
16) பறவை ..........................
18) பசு ..........................

★ **கீழே உள்ள சொற்களுக்கு ப**
**தெரிந்து எழுதுக.**
20) YOU ..........................
22) DOG ..........................

★ **அடுத்து வரும் வினாக்களி**
**இடங் களை 'ஆ' பகுதியில்**
**கத்தை வெற்றுக் கூட்டினு**

**வினாக்களின் சரியான விடையின் கீழ்க்**

ள், பச்சை என்ற ஒழுங்கில் மின்குமிழ்கள்
5 வரிசையில் அலங்கரிக்கப்பட்டுள்ளன.
நிறம் சிவப்பு எனின் அந்த வரிசையில் 35
குமிழின் நிறம் யாது?
 மஞ்சள் 3) பச்சை 4) கூறமுடியாது

ணம் செய்யும் ஒரு பேரூந்தின் சில்லுகளின்
4 ஆகும். அவ்வண்டியில் 50 பேர் பயணம்
த்தனை சில்லுகள் இருக்கும்?
 8 3) 10 4) 12

ாயில் ஆடுகளும், கோழிகளுமாக 10 பிரா
ான. அவற்றின் கால்களின் எண்ணிக்கை
னவே அங்குள்ள கோழிகள் எத்தனை?
 6 3) 3 4) 5

 2 ஆல் பெருக்கி, பின் 3ஐக் கூட்டி, பின்
, பின்பு 2 வகுத்தால் வரும் விடை 5
வெண் யாது
 10 3) 6 4

**களுக்கு டையினைத் தெரிந்து அதன்**
**ரிக் கோ ழுதுக.**

*துடிப்பிரு இரவு பகல் விழித்திருக்கும்.*

 2) மணிக்கூடு
 4) வானொலி (.........)

*ந்தால் ஓடித்திரிவான். வெளியே வந்தால்*
*வான்.* அவன் யார்?
 2) நாக்கு
 4) முட்டை (.........)

**கீழ்க் கீறிடுக.**
ள் வாழும் தாவரம்
 வாழை 3) தென்னை 4) நெல்
ங்களின் நிறைவில் கொண்டாடப்படும் விழா
ழா 2) பொன்விழா 3) பவளவிழா

---

**பகுதி II நேரம் 1 மணி 15 நிமி.**

**வாசித்து 1 முதல் 23 வரையுள்ள வினாக்**
**களைப் புள்ளிக் கோட்டின் மீது எடுதுக.**

*ளையாடு பாப்பா - நீ*
*இருக்க லாகாது பாப்பா*
*ளையாடு பாப்பா - ஒரு*
*தையை வையாதே பாப்பா*

*சிறு குருவி போல - நீ*
*பறந்து வா பாப்பா*
*பறவைகளைக் கண்டு - நீ*
*ல் மகிழ்ச்சி கொள்ளு பாப்பா*

*திரியுமந்தக் கோழி - அதை*
*விளையாடு பாப்பா*
*இருடுமந்தக் காக்கை - அதற்கு*
*பட வேணுமடி பாப்பா*

*பொழிந்துதரும் பாப்பா - அந்தப்*
*நல்லதடி பாப்பா*
*குழைத்து வரும் நாய்தான்*
.........................................................

டிய கவிஞர் யார்?.........................................
காகப் பாடுவது போல் அமைந்துள்ளது?
.........................................................
ம் பறவைகள் இரண்டை எழுதுக?
.........................................................
பட வேண்டும் எனக் குறிப்பிடுகிறார்?
.........................................................
பட்ட பாடல் வரியை உரிய இடத்தில்

**குறிப்பிடப்படும்**
இரண்டு எழுதுக.
........................ ii)........................................
அதிக தடவை வந்துள்ள சொல் எது?
.........................................................
களை எழுதுக.
........................ 2) நாய் - ........................
.........................

**சொல் எழுதுக.**
..................... 9) பறவை ........................
..................... 11) மனதில் ........................

**சொல் எழுதுக.**
..................... 15) சின்னஞ்சிறிய........................
..................... 15) வா ........................

**ளுக்கு ஆங்கிலப் பதம் எழுதுக..**
..................... 17) கோழி ........................
..................... 19) காகம் ........................

**நக்கு பாடலில் இருந்து தமிழ்ச் சொல்லைத்**

....... 21) MILK ........................
....... 23) BABY ........................


**க்களில் 'அ' பகுதிக்குரிய பொருத்தமான**
**குதியில் இருந்து தெரிந்து அதன் இலக்**
**ட்டினுள் எழுதுக.**

| 'அ' | | 'ஆ' |
|---|---|---|
| 24) காகிதத் தொழிற்சாலை | ☐ | 1)தெகிவளை |
| 25) ரயர்த் தொழிற்சாலை | ☐ | 2)புத்தளம் |
| 26) சிமெந்துத் தொழிற்சாலை | ☐ | 3)வாழைச்சேனை |
| 27) உப்பு விளையுமிடம் | ☐ | 4)திருகோணமலை |
| 28) மிருகக் காட்சிச்சாலை | ☐ | 5)களனி |
| 29) இயற்கைத் துறைமுகம் | ☐ | 6)ஆனையிறவு |

★ **பின்வரும் உணவுப் பண்டங்களைப் பாதுகாக்கும் முறைகளை அருகே தரப்பட்டுள்ள விடைகளில் இருந்து தெரிந்து அதன் ஆங்கில எழுத்தை அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

30) எலுமிச்சம்பழம் (.........) A. போத்தலில் அடைத்தல்
31) தானியங்கள் (.........) B. புகையூட்டல்
32) குடிபானங்கள் (.........) C. ஊறுகாயிடுதல்
33) புகையிலை (.........) D. கருவாடாக்கல்
34) இறைச்சிவகை (.........) E. உலர்த்தல்
35) சிறு மீன்கள் (.........) F. குளிரூட்டல்

★ **கீழ்வரும் பரிசோதனையை அவதானித்து அதன் கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.**


A B C

மூன்று வகையான மண் வகைகளையும் மூன்று புனலுக்குள் தும்பு வைத்துத் தனித்தனியே ஒவ்வொரு வகை மண்ணையும் இட்டு ஒரே அளவான நீர் சோக்கப்பட்டு சிறிது நேரத்தின் பின் மேல் உள்ளவாறான தோற்றத்தை அவதானிக்கலாம். இப்பரிசோதனையின்படி கீழ்வரும் ஒவ்வொரு போத்தலின் மேலுள்ள புனலில் இடப்பட்ட மண் வகையை எழுதுக.

36) A ..................................................
37) B ..................................................
38) C ..................................................

★ **கீழ்வரும் தாவரங்களை ஆணிவேர், நாருருவேர் கொண்ட தாவரங்களாக வேறுபடுத்தி அட்டவணையை நிரப்புக.**
*மா, தென்னை, நெல், வேம்பு, பனை, புளி*

| | ஆணிவேர் | நாருருவேர் |
|---|---|---|
| 39) | .................... | .................... |
| 40) | .................... | .................... |
| 41) | .................... | .................... |


★ **பின்வரும் ஒவ்வொரு கூற்றும் சரியாயின் சரி என்றும் பிழையாயின் பிழை என்றும் அடைப்புக்குள் எழுதுக.**

42) அஞ்சல் ஓட்டம் ஒரு சுவட்டு நிகழ்ச்சி ஆகும். ( )
43) சதுரங்கம்(செஸ்) உடலுக்கு வலுவூட்டும் விளையாட்டாகும். ( )
44) கிரிக்கற் விளையாட்டில் பந்தை அடித்தல், பந்தைக் காத்தல், பந்தை எறிதல், விக்கற் காத்தல், விக்கெற்றுகளுக்கிடையே ஓடுதல் போன்ற திறன்களை வளர்க்க வேண்டும். ( )
45) வலைப்பந்தாட்டம் குழுவாக விளையாடும் விளையாட்டல்ல. ( )

★ **பின்வரும் பாடல்கள் இரக்கம், ஒற்றுமை, பக்தி, தேசப்பற்று, வியப்பு என்பவற்றில் எதை உணர்த்துகின்றன என்பதை அடைப்புக்குள் எழுதுக.**

46) *"இலங்கை எங்கள் தாய் நிலம்*
*இணையில்லா எழில் நிலம்......"* (..........................)
47) *"உலகத்து நாயகியே தேவி தேவி*
*அம்மா தேவி தேவி............"* (..........................)
48) *"பஞ்சு காற்றில் பறப்பானேன்?*
*பனங்காய் நிலத்தில் விழுவானேன்?"* (..........................)
49) *"நண்டின் காலை ஒடிக்காதே*
*நாயைக் கல்லால் அடிக்காதே......"* (..........................)
50) *"பந்தடிப்போம் பந்தடிப்போம் பந்தடிப்போமே*
*பாலர் நாங்கள் கூடி ஆடிப் பந்தடிப்போமே...."*
(..........................)

★ **கீழே தரப்பட்டுள்ள படங்களுக்குரிய ஆங்கிலச் சொற்களை எழுதுக.**

51) 
..........................
52) 
..........................
53) 
..........................
54) 
..........................

★ **கீழே தரப்பட்டுள்ள வினாக்களில் சித்திரா தனது சித்திரப்பாடத்தின்போது நிறங்கள் சிலவற்றை ஒன்றுடன் ஒன்று கலந்து சில புதிய நிறங்களைப் பெற்றாள். கலந்து பெற்ற நிறங்களை ஆங்கிலத்தில் எழுதுக.**

55) RED+YELLOW =..........................
56) YELLOW+BLUE =..........................
57) RED+WHITE =..........................
58) RED+BLUE =..........................

★ **சேர்த்தெழுதுக**
59) ஆறு + கரை = ..........................
60) மூன்று + நூறு = ..........................

★ **பிரித்தெழுதுக**
61) ஆலிலை ..........................
62) தேநீர் ..........................

★ **பின்வரும் வசனத்தில் பகுதிகளை எழுதுக**
*"அழகிய வண்டுகள் இனிமையான தேனை உறிஞ்சிக் குடித்தன."*
63) எழுவாய் ..........................
64) பயனிலை ..........................
65) செயப்படுபொருள் ..........................
66) எழுவாய் அடைமொழி ..........................
67) பயனிலை அடைமொழி ..........................
68) செயப்படுபொருள் அடைமொழி..........................

★ **பின்வரும் வினாக்களுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.**

69) 1) வானொலிப் பெட்டி ஒன்றின் விலை 7520ரூபா ஆகும். இதன் விலையைச் சொற்களில் எழுதுக.
..........................
2) மேலுள்ளவாறு ஐந்து வானொலிப் பெட்டிகளை வாங்குவதற்கு எவ்வளவு பணம் தேவை?
..........................

70) 1)பாடசாலை மைதானத்தில் நிரையொன்றில் 25 மாணவர்கள் வீதம் 16 நிரைகளில் மாணவர்கள் உள்ளனர். மைதானத்திலுள்ள மாணவர்கள் எத்தனை பேர்?..........................
2) ஒரு மாணவனுக்கு 4 விசுக்கோத்துக்கள் வீதம் கொடுப்பதற்கு எத்தனை விசுக்கோத்துக்கள் தேவை?..........................
3) ஒரு பைக்கற்றில் 50 விசுக்கோத்துக்கள் இருந்தால் மாணவர்கள் எல்லோருக்கும் கொடுப்பதற்கு எத்தனை பைக்கற் வாங்கவேண்டும்?..........................
4) ஒரு பைக்கற் விசுக்கோத்தின் விலை 25 ரூபா ஆகும். 1000ரூபாவைக் கடைக்காரரிடம் கொடுத்து தேவையான விசுக்கோத்துப் பைக்கற்றுக்களை வாங்கிய பின் மிகுதிப் பணமாக எவ்வளவு கிடைக்கும்?..........................

71) 1) நிந்துஜன் 1250cm நீளமுள்ள காற்சட்டைத் துணியினை விலைக்கு வாங்கினான். அதன் நீளத்தை மீற்றர் சென்ரிமீற்றரில் எழுதுக.
.................. m.................. cm
2) 1மீற்றர் துணியின் விலை 50 ரூபா எனின் நிந்துஜன் வாங்கிய துணியின் பெறுமதி யாது?
..................ரூபா..................சதம்.

72) 1) கடை ஒன்றில் வாங்கிய அரிசியில் ஒரு பையில் 1Kg750g அரிசியும் இன்னொரு பையில் 2Kg750g அரிசியும் இருந்தன. இரு பையிலும் இருந்த அரிசியின் நிறையை கிராமில் தருக.
.................................. கிராம்
2) கடையில் வாங்கிய அரிசியின் மொத்தப் பெறுமதி ரூபா180 எனின் 1 Kg அரிசியின் விலை யாது? ..................ரூபா ..................சதம்

73) 1) அமுதன் வீட்டிலிருந்து புறப்பட்டு பாடசாலை செல்வதற்கு 2 மணித்தியாலம் 15 நிமிடம் எடுத்தது. அவன் பாடசாலை செல்வதற்கு எடுத்த நேரத்தை நிமிடத்தில் தருக?.................. நிமிடம்
2) அமுதன் மு.ப 10.00 மணிக்கு பாடசாலையை அடைந்தான் எனின் வீட்டில் இருந்து புறப்பட்ட நேரத்தை நியம நேரத்தில் எழுதுக?..................

★ **'நான் ஒரு வள்ளலானால்........' என்னும் தலைப்பில் சரியான எழுவாய் பயனிலைகளுடன் 6 வசனங்கள் எழுதுக. (ஒவ்வொரு வசனத்திலும் நான்கு சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு அழகான கையெழுத்தில் தெளிவாக எழுதப்படவும் வேண்டும்.)**

..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................
..........................................................

**தயாரிப்பு:-**
**திரு.வேலுப்பிள்ளை அன்பழகன்**
ஆசிரியர் கலாசாலை, கோப்பாய்




கிழக்கு மாகாண வேலையற்ற பட்டதாரிகள் மேற்கொண்டுள்ள போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்து யாழ்.மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் நேற்று முன்தினம் யாழ்.செயலக வளவில் அடையாள உண்ணாவிரதம் மேற்கொண்ட போது எடுக்கப்பட்ட படங்கள். *(படம்:பொ. இராஜேஸ்வரன்)*

## இடைக்கால நிர்வாக சபை தமிழ் ஈழத்தின் வாசற்படி!

### கங்கொடவில சோம தேரர் கூறுகிறார்

கொழும்பு,ஓக.9

வடக்கு-கிழக்கில் அமையவிருக்கும் இடைக்கால நிர்வாகசபை தமிழ் ஈழத்தின் வாசல்படி என்பதை சந்தேகத்துக்கு இடமின்றிச் சுட்டிக் காட்டலாம்.

தெற்கில் பெரும் செல்வாக்கு மிக்கவரான பௌத்த குருவான கங்கொடவில சோமதேரர் இப்படிக் கூறியுள்ளார்.

அரசு முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டநகல் குறித்துக் கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த கருத்துக்கள் வருமாறு:-

இடைக்கால நிர்வாக சபை ஒன்றை நிறுவி அதனை 10 ஆண்டுகளுக்கு பிரபாகரனிடம் ஒப்படைக்க ஜனாதிபதி முடிவு செய்துள்ளார் என்பது சிலருடைய வாதம். அதன் மூலம் ஈழம் உருவாவது உறுதிப்படுத்தப்படும் என எதிர்க்கட்சியான ஐ.தே.க. கூக்குரலிட்டுக் கொண்டிருந்தது.

கடந்த ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கு-கிழக்குக்கு இடைக்கால நிர்வாக சபை ஒன்றை வழங்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் கூறியதாக ஆளுங்கட்சி கூக் குரல் இட்டது. ஆனால் இப்போது இருசாராரும் கைகோர்த்து இடைக் கால நிர்வாகசபையை ஏற்படுத்த இணக்கம் கண்டுள்ளனர். எவ்வாறாயினும் பெரும்பான்மைச் சிங்களவர்களைக் காட்டிக் கொடுத்து தமிழர்களுக்கு தமிழ் ஈழத்தைப் பெற்றுக் கொடுக்க இவ்விருசாராரும் செயலில் இறங்கியுள்ளனர் என்பது மட்டும் புலனாகிறது.

இடைக்கால நிர்வாக சபையானது தமிழ் ஈழத்தின் வாசல்படி என்பதை சந்தேகத்துக்கு இடமின்றிச் சுட்டிக் காட்டலாம். மறுமுனையில் வடக்கில் பிரபாகரனின் ஆட்சியைத் தோற்கடிக்காமல் எந்த நிர்வாகத்தையும் செய்ய முடியாது. மாய மந்திரங்களைப் பயன்படுத்தி அரசாங்கம் இதனைச் செய்யத் துடிக்கின்றதோ என்று கூட எண்ணத் தோன்றுகிறது.

சில தமிழ்த் தலைவர்கள் இடைக்கால நிர்வாக சபையை நிராகரித்திருந்தாலும் அதில் எவ்வித உண்மைத் தன்மையும் இல்லை. சிங்கள முட்டாள்களைத் திசை திருப்பவே அவர்கள் அவ்வாறு நடந்து கொள்கிறார்கள்.

வடக்கு-கிழக்கில நிர்வாகசபை தோற்றுவிக்கப்படுமாயின் வடக்கிலுள்ள இராணுவத்தையும் வாபஸ் பெற வேண்டிய நிலை ஏற்படும். மேஜர் ஜானக பெரேராவை முன்கூட்டியே கொழும்புக்கு அழைத்தமைக்குப் பின்னணியிலும் இச்செயற்பாடே காரணம் என்ற சந்தேகமும் எழுவது நியாயமானதொன்றாகும். இராணுவத்தை வாபஸ் பெற்றுக் கொண்டு இடைக்கால நிர்வாக சபையை ஏற்படுத்திக் கொடுத்தால் அது விமான நிலையமும், துறைமுகமும் சூழவுள்ள வடக்கு-கிழக்கில் ஈழத்தை ஏற்படுத்திக் கொடுப்பதற்குக் களமாகி விடுவதில் எந்தச் சிக்கலுமில்லை.

பிரபாகரனின் யுத்தம் இந்நாட்டில் வாழும் இரண்டு மில்லியன் தமிழர்களுக்கு மட்டுமல்ல அதேயுத்த சூழ்நிலைக்குள் தமிழ்நாட்டில் வாழும் 55 மில்லியன் தமிழர்களையும் ஆள வேண்டும் என்ற உள்நோக்கமும் செறிந்தது என்பதை அதிகாரப்பித்துப்பிடித்த சிங்களத் தலைவர்கள் அறிந்து கொள்ளாதது ஒன்றும் ஆச்சரியமானதல்ல.

இவ்வாறு சோம தேரர் தெரிவித்தார். (ஐ-க-3)



**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரியின் பீடாதிபதிக்கு ஈ.பி.டி.பி. அமைப்பினர் கார் ஒன்றை அன்பளிப்புச் செய்தனர்.**

**ஈ.பி.டி.பியின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே. ஜெகன் புதிய காரினை கல்வியியல் கல்லூரி பீடாதிபதி தி.கமலநாதனிடம் வைபவரீதியாகக் கையளிப்பதைப் படத்தில் காணலாம். கல்வியியல் கல்லூரி, ஈ.பி.டி.பி யாழ்.அலுவலகம் ஆகியவற்றைச் சேர்ந்தோரும் படத்தில் உள்ளனர்.** *படம்:பொ. இராஜேஸ்வரன்*

### கல்வி முதுமாணி நேர்முகப் பரீட்சை

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.பல்கலைக்கழகத்தில கல்வி முதுமாணி கற்கை நெறிக்கான எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 9மணிக்கு யாழ்.பல்கலைக் கழக பட்டப்பின் படிப்புகள் பீடத்தில் நடைபெறும்.

இந் நேர்முகப்பரீட்சைக்குத் தோற்றுபவர்களுக்குரிய கடிதங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. அத்துடன் எழுத்துப் பரீட்சையில் தகைமை பெற்றவர்களின் பெயர்ப்பட்டியலை பட்டப்பின் படிப்புகள் பீடாதிபதி அலுவலகத்தில் பார்வையிடலாம் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

### வணிகர்களைச் சமுகமளிக்கக் கோரிக்கை

சாவகச்சேரி வணிகர் மன்ற எல்லைக்குள் வர்த்தக முயற்சியில் ஈடுபட்டதால் 'உ' அட்டை வழங்கப்பட்டு இடம்பெயர்வின் பின் உலர் உணவு நிவாரணத்தைப் பெறமுடியாதவர்களின் விவரங்கள் மற்றும் அவர்களது பிரச்சினைகள் பற்றி சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம் ஆராயவுள்ளது.

இம் முயற்சிக்கு உதவும் முகமாக சம்பந்தப்பட்ட வணிகர்களை இன்று புதன்கிழமையும் நாளை வியாழக்கிழமையும் காலை 9 மணி முதல் நெல்லியடி வணிகர் மன்றக் காரியாலயத்துக்குச் சமுகமளிக்குமாறு மன்றச் செயலாளர் கேட்டுள்ளார். (க)

## மக்கள் முகம்

யாழ்.மத்திய கல்லூரியில் இயங்கிவரும் மாவட்ட விளையாட்டுப் பயிற்சி நிலையத்தின் பொறுப்பதிகாரியாக தெல்லிப்பழை பிரதேச செயலக விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய செ.ரமணன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை வேலணை விளையாட்டு உத்தியோகத்தராகக் கடமையாற்றிய கா.சுதாகரன் மாவட்ட விளையாட்டு அலுவலகத்துக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-5)

★ ★ ★ ★ ★

மந்திகை அரசினர் வைத்தியசாலை மாவட்ட வைத்தியப் பொறுப்பதிகாரியாக மீண்டும் டாக்டர் எஸ்.கதிரைவேற்பிள்ளை பதவி ஏற்கவுள்ளார். முன்னரும் இப்பதவியில் கடமையாற்றிய இவர் நீண்டகால விடுமுறையில் சென்றிருந்தார். (ஐ-173)

★ ★ ★ ★ ★

யாழ்.மாவட்ட புடைவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கச் சமாசத்தின் தலைவராக கந்தையா சிவலிங்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ்.கே.சண்முகநாதன் இந்த நியமனத்தை வழங்கினார். (ஐ-5)

★ ★ ★ ★ ★

வடபிராந்திய போக்குவரத்துச் சபையில் கடமையாற்றும் இருவருக்கு இலங்கை மத்திய போக்குவரத்துச் சபையால் பதவிஉயர்வு வழங்கப்பட்டுள்ளது.

வட்டாரக் கணக்காளராக சு.பா.தியாகராஜாவும் பிராந்தியக் கணக்காய்வாளராக எம்.அருள் சோதிநாதன் பதவி உயர்த்தப்பட்டுள்ளார். (ஐ-17)

★ ★ ★ ★ ★

வடக்கு - கிழக்கு மாகாண திட்டமிடல் செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகப் பணியாற்றிவரும் ஸ்ரீ செவ்வந்திநாதக்குருக்கள் சுவாமிநாதன் முகாமைத்துவப் பணிப்பாளராக மாகாண ஆளுநரினால் கடந்த மாதம் 24ஆம் திகதி முதல் நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ-3)

★ ★ ★ ★ ★

வலிகாமம் மேற்கு சங்கானை பிரதேச செயலர் பிரிவில் ஓய்வு பெற்றோர் சங்கம் அண்மையில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

சங்கத்தின் தலைவராக என்.சிவசுப்பிரமணியமும் உபதலைவராக வி.நாகராசாவும், செயலாளராக கே.மாரிமுத்துவும், உப செயலாளராக எஸ்.செல்வராசாவும் பொருளாளராக எம்.நடராசாவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் நிர்வாக சபை உறுப்பினர்களாக அமரர்க்கண்டரும் எஸ்கந்தையாவும், பொதுச்சபைப் பிரதிநிதியாக என்.சிவசுப்பிரமணியமும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

★ ★ ★ ★ ★

உடுப்பிட்டி வாய்க்கால் ஆறுகொழு வைரவர் ஆலயத்தின் புதிய நிர்வாகசபை அண்மையில் தெரிவு செய்யப்பட்டது.

சபையின் தலைவராக க.இராமச்சந்திரன், செயலாளராக சி.பரமேஸ்வரன், உபதலைவராக ஏ.தசரதர், உப செயலாளராக வை.மோகனசுந்தரம், பொருளாளராக சி.த்துரராசா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் நிர்வாகசபை உறுப்பினர்கள் மற்றும் திருப்பணி அங்கத்தவர்களும் தெரிவு செய்யப்பட்டனர். (க)

## ஆறு அடையாள அட்டைகளையும் உரியவர்களிடம் வழங்கப் பணிப்பு

யாழ்.தட்டாதெருச் சந்தியிலுள்ள சோதனைச் சாவடியில் வைத்து போலி தேசிய அடையாள அட்டைகள் என்று கூறி பொலீஸாரினால் கைப்பற்றப்பட்ட 6அடையாள அட்டைகளையும் உரியவர்களிடம் வழங்குமாறு யாழ்.நீதிவான் பா.சுப்பிரமணியம் உத்தரவிட்டார்.

நேற்று முன்தினம் இந்த வழக்கு யாழ்.நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இந்த அடையாள அட்டைகள் அனைத்தும் சட்டபூர்வமானவை என்று கொழும்பிலுள்ள ஆள்பதிவுத் திணைக்கள ஆணையாளர் தெரிவித்திருப்பதால், அவற்றை உரியவர்களிடம் வழங்குமாறு சட்டத்தரணி பா.தவபாலன் கோரிக்கை விடுத்தார்.

கடந்த ஜூலை மாதம் 7ஆம் திகதி போலி தேசிய அடையாள அட்டைகள் வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் தட்டாதெருச் சந்தியில் ஆறு இளைஞர்கள் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதுடன் அந்த அடையாள அட்டைகளும் மன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அந்த அடையாள அட்டைகள் பரிசிலனைக்காகக் கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (ஐ-5-9)

## செய்திச் சரம்

### குடிசைகள் அமைப்பு

கொழும்புத்துறை,ஓக.9

அராலி வடக்கு நாகேந்திரமடம் முகாமில் வசிப்போருக்கென 20தற்காலிகக் குடிசைகள மற்றும் மலசலகூட வசதிகளை 'கெயர்' நிறுவனம் அமைத்து வருகிறது.

குருநகர், பாசையூர், கரையூர் பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்தோருக்கு இக் குடிசைகள் கையளிக்கப்பட உள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-30)

### சிறப்புமலர் வெளியீடு

கொழும்புத்துறை,ஓக.9

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதாசேவாச்சிரமத்தின் 31ஆவது ஆண்டுப் பூர்த்தியை முன்னிட்டு அண்மையில் அன்னையின் உருவப்படத்துடன் சிறப்பு மலர் சேவாச்சிரமம் செயலாளர் சுவாமி சித்ரூபானந்தாவினால் வெளியிட்டு வைக்கப்பட்டது. (ஐ-30)

### தலைமை அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி,ஓக.9

நெல்லியடியில் இயங்கி வந்த சாவகச்சேரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க தலைமை அலுவலகம், கிராமியவங்கி ஆகியவை மந்திகை ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மாடிக் கட்டடத்திற்கு மாற்றப்பட்டுள்ளதாக சங்கத் தலைவர் செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (ஐ-117)

### உ.கிழங்கு விலை உயர்வு

சாவகச்சேரி,ஓக.9

யாழ்ப்பாணத்திலும் ஏனைய இடங்களிலும் கிலோ 40ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வந்த உருளைக்கிழங்கு தற்போது கிலோ 75ரூபா வரை விற்பனை செய்யப்பட்டுவருகிறது. (ஐ-31)

### கடும் காற்றினால் மரங்கள முறிந்தன

உரும்பிராய்,ஓக.9

கடந்த சில தினங்களாக வீசும் புயல் காற்று உரும்பிராய், ஊரெழு, நீர்வேலி பிரதேசங்களில் அழிவுகளை ஏற்படுத்தியுள்ளது.

வாழைமரங்கள், முருங்கைமரங்கள் முறிந்து வீழ்ந்துள்ளன. பாரிய மரங்களின் கிளைகளும் முறிந்துள்ளன.

மின்சாரக் கம்பிகள்மீது மரக்கிளைகள் முறிந்து வீழ்ந்ததனால் பல இடங்களிலும் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது.

இவை உடனுக்குடன் மின்சார சபைப் பணியாளர்களினால் சீர் செய்யப்பட்டன. (ஐ-154)

### ஊன்றுகோல்களை திருப்பித்தரக் கோரிக்கை

நெல்லியடி,ஓக.9

மந்திகை மருத்துவமனையில் உள்ள பௌதிக சிகிச்சைப்பிரிவில் இருந்து ஊன்றுகோல்களைப் பெற்றுச்சென்ற நோயாளிகள், அவற்றை மீண்டும் திருப்பி ஒப்படைக்குமாறு மந்திகையிலுள்ள எம்.எஸ்.எவ். மருத்துவர் குழு சத்திரசிகிச்சை நிபுணர் தெரிவித்துள்ளார்.

தற்பொழுது வடமராட்சிப் பகுதியில் விபத்துக்களில் சிக்கி கை, கால் முறிந்த நிலையில் தினமும் பலர் சிகிச்சைக்கு வருகின்றனர்.

இவர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்ட பின்னர், ஊன்று கோல்களின் உதவியுடனேயே அந்த நோயாளர்கள் நடமாட வேண்டியுள்ளது.

இதனால் ஏற்கனவே இவ்வைத்தியசாலையிலிருந்து பெற்றுச் சென்ற ஊன்று கோல்களை மீள ஒப்படைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-109)

### சமுகமளிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஓக.9

ஆரம்பநெறி ஆசிரியர் தெரிவில் பாதிக்கப்பட்டோர் சங்கத்தின் பிரதேச செயலர் பிரிவுகளைச் சேர்ந்த நிர்வாகசபை உறுப்பினர்கள் அனைவரையும இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஆரியகுளம் சந்திக்கருகில் உள்ள உயர்கல்வி நிலையத்தில் சமுகமளிக்குமாறு சங்கத் தலைவர் கேட்டுள்ளார். (க)

# விசேட அடையாள அட்டைகளைத் தொலைத்தோருக்கு மாற்று ஏற்பாடு

யாழ்ப்பாணம், ஒக. 9

விசேட அடையாள அட்டைகளைத் தொலைத்தவர்களுக்கு மாற்று ஏற்பாடுகள் செய்வது தொடர்பான நடவடிக்கைகளை 51 ஆவது படையணிக் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் காமினி ஜெயசுந்தர மேற்கொண்டு வருகிறார்.

அண்மையில் யாழ். செயலக விசேட அடையாள அட்டைப் பிரிவுக்குவிஜயம் செய்த அவர் அங்குள்ள அதிகாரிகளுடன் உரையாடியுள்ளதுடன் இதுதொடர்பான விவரங்களையும் தம்மிடம் சமர்ப்பிக்குமாறு கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் விசேட அடையாள அட்டையைத் தொலைத்து மீளப்பெற விண்ணப்பித்தவர்களின் நூற்றுக்கணக்கான விண்ணப்பங்கள் விசேட அடையாள அட்டைப் பிரிவில் தேங்கிக் கிடக்கின்றன.

1998 ஆம் ஆண்டு முதல் தொலைந்து போன விசேட அடையாள அட்டைகளுக்குப் பதிலாக மீண்டும் விசேட அடையாள அட்டைகளை வழங்குவது இராணுவ அதிகாரிகளினால் நிறுத்தி வைக்கப்பட்டது தெரிந்ததே.

(இ-5)

## புலமைப் பரிசில் பரீட்சைக்கு 7ஆயிரம் மாணவர் தோற்றுவர்

யாழ்ப்பாணம், ஒக 9

இம்மாதம் 13ஆம் திகதி நடைபெறவுள்ள 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சைக்கு குடாநாட்டில் இருந்து சுமார் 7 ஆயிரம் மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

இவர்களுக்கென 76 பரீட்சை நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. இவற்றில் 35 பரீட்சை நிலையங்கள் யாழ்ப்பாணம், தென்மராட்சி மற்றும் தீவகம் கல்வி வலயங்களுக்கும் —

மிகுதி 41 பரீட்சை நிலையங்கள் வலிகாமம் மற்றும் வடமராட்சி கல்வி வலயங்களுக்கும் அமைக்கப்படவுள்ளன என்று யாழ். கல்வி வலய அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-10-9)

## நாய்களுக்குத் தடுப்பூசி

சண்டிலிப்பாய், ஒக. 9

பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் பிரிவில் பின்வரும் இடங்களில் இன்று புதன்கிழமை வளர்ப்பு நாய்களுக்கான விசர்நோய்த் தடுப்பூசிமருந்து போடப்படவுள்ளது.

இன்றையதினம் பண்டத்தரிப்பு செபமாலை மாதா சனசமூக நிலையத்தில் காலை 9 மணிமுதல்10.30மணிவரையும் — சில்லாலை கிராம முன்னேற்றச் சங்க மண்டபத்தில் காலை 10.30 முதல் 11.30 மணிவரையும்— மாதகல் பிள்ளையார் கோயிலடி தரிசிப்பு மருந்தகக் கட்டடத்தில் நண்பகல் 12 மணி முதல் 1 மணிவரையும் — சகாயபுரம் கிராம முன்னேற்ற சங்க மண்டபத்தில் நண்பகல் 1.30 மணிமுதல் 2 30 மணி வரையும் — விசர்நோய்த் தடுப்பு ஊசி போடப்படும் என்று பண்டத்தரிப்பு பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித்துள்ளார்.

இப்பகுதிகளிலுள்ள பொது மக்கள் தங்கள் வளர்ப்பு நாய்களுக்கு தவறாது தடுப்பூசி போடும்படியும் அவர் கேட்டுள்ளார்.

(க-135)


## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

**தூசைப்பிள்ளை அந்தோனிப்பிள்ளை**

தோற்றம் 18-10-1938 | மறைவு 09-08-1993

மண்ணோரை மீட்க வந்த ராஜாவே!
விண்ணின்று மீண்டும் வாருமே!
மண்ணோராம் எம்மை விண்ணோடு
சேர்க்க விண் தூதரோடு வாருமே!
அமைதியாக அவசரமாக வந்த அழைப்பு
அனைவரையும் திடுக்கிட ஆறாத் துயரில்
ஆழ்த்திவிட்டதே. மண்ணில் நீ மறைந்தாலும்
எங்கள் மனக்கண் முன் மறைவதில்லையே
எம் சோக நெஞ்சத்தின் உணர்வு இழைகளால்
உங்களை அஞ்சலி செய்கின்றோம்.

இவரின் ஆத்ம இளைப்பாற்றிக்காக நவாலி சென். பீற்றர் தேவாலயம் மற்றும் சுவிஸ், ஜேர்மனி தேவாலயங்களில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்.

இவரின் அன்பால் துயருறும்
மனைவி, பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், சகோதரி, மச்சான்மார்.

தகவல்:
மகள்: அ. அஞ்சலா,
மருமகன்: S. ஜெரால்ட்
(ஆய்வுகூட உதவியாளர்).
'தந்தை இல்லம்',
லோட்டன் றோட்,
மானிப்பாய்.

(77108)


## காய்ச்சல் பரவுகிறது

காரைநகர். ஒக. 9

எழுவைதீவுப் பகுதியில் ஒருவித புதுவகைக் காய்ச்சல் நோய் வேகமாகப் பரவி வருகின்றது.

இதுவரை 30 இற்கும் மேற்பட்டோர் காய்ச்சலால் பீடிக்கப்பட்டுள்ளனர். எழுவைதீவில் அரசினர் (ஆங்கில) வைத்தியசாலை இல்லை. நோயாளர் அங்குள்ள ஆயுள்வேத வைத்தியசாலையிலேயே சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

(ஐ-72)

## மகாபொல கொடுப்பனவு

யாழ்ப்பாணம், ஒக 9

யாழ். பல்கலைக்கழகத்தின் 1997—98 மற்றும் 1998—99 கல்வியாண்டுகளுக்கான மகாபொல கொடுப்பனவுகள் நேற்றுத் தொடக்கம் பல்கலைக்கழக மக்கள் வங்கிக் கிளையின் மூலம் வழங்கப்பட்டுவருகின்றன.

உரிய மாணவர்கள் தமது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன் மேலதிக விவரங்களை பல்கலைக்கழக அறிவித்தல் பலகையில் பார்வையிட முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(ஐ-10)

## கல்விக்கல்லூரியில் நூலக வாரம்

யாழ்ப்பாணம், ஒக. 9

யாழ். கல்வியியல் கல்லூரியினர் அடுத்த மாதம் 2ஆம் திகதி முதல் 6ஆம் திகதி வரை நூலக வாரம் அனுஷ்டிக்கவுள்ளனர்.

கல்லூரியின் மாணவர்கள், விரிவுரையாளர்கள், கல்விசாரா ஊழியர்கள் சேர்ந்து இந்தவாரத்தில் நூல் சேகரிக்கும் பணியில் ஈடுபடுவர்.

கல்விக் கல்லூரியில் போதியளவு நூல்கள் இல்லாத காரணத்தால் நூலகம் ஒன்றை அமைப்பதற்காக இந்த நூலகவாரம் அனுஷ்டிக்கப்படுவதாக கல்விக் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் தெரிவித்தார். (இ-9)

## மணல் அள்ளத் தடை விதிப்பு

சண்டிலிப்பாய், ஒக. 9

நவாலி, ஆனைக்கோட்டை ஆகிய பகுதிகளில் மண் அள்ளப்படுவதை சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா. வேதநாயகன் தடைசெய்துள்ளார்

இப் பகுதிகளில் பெருமளவு மண் அள்ளப்பட்டு வெளியிடங்களுக்கு கொண்டு செல்லப்படுவதால் கடல் உவர் நீர் வயற்காணிகளுக்குள் புகுந்துவிடும் அபாயம் ஏற்படுவதாக இப் பகுதிகளிலுள்ள பொதுநல அமைப்புகளால் சுட்டிக் காட்டப்பட்டதை அடுத்தே இந்தத்தடை உத்தரவு கடந்த வாரம் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நவாலி, ஆனைக்கோட்டைப் பகுதிகளின் கிராம அலுவலர்களுக்கும் பிரதேச செயலர் பணிப்புரை விடுத்துள்ளார்.

(க-135)

## தென்மராட்சி பதில் அதிபர்கள் பற்றிய விவரங்கள் அனுப்பப்படாததால் நிரந்தர நியமனம் தாமதம்

திருகோணமலை, ஒக.9

பாடசாலைகளில் பதில் அதிபர்களாகப் பணிபுரியும் அதிபர்களை நிரந்தரமாக்குவதற்காக அவர்களின் விவரங்களை அனுப்பும்படி மாகாணக்கல்வி அமைச்சு வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கோரியிருந்தபோதும் -

தென்மராட்சிக் கல்வி வலயம் மட்டும் இதுவரை விவரங்களை அனுப்பவில்லை என்று இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த. மகாசிவம் தெரிவித்தார்.

இந்த விவரங்கள் கிடைக்காத காரணத்தால் அந்த வலயத்தில் உள்ள பாடசாலைகளில் பதில் கடமை புரியும் அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது என்று மாகாணக்கல்வி அமைச்சுச் செயலாளர் தெரிவித்துள்ளதாக அவர் மேலும் கூறினார்.

இடம்பெயர்ந்த நிலையில் உள்ள அந்த அதிபர்களுக்கு நிரந்தர நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்று அவர் தெரிவித்தார்.

(3)

## மாதகல் பகுதியில் லயன்ஸ் சிகிச்சை

யாழ்ப்பாணம், ஒக. 9

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் மாதகல் பகுதியில் கடந்த வாரம் நடத்தப்பட்ட இலவச மருத்துவ முகாமில் 296 பேர் பங்குபற்றிப் பயனடைந்துள்ளனர்.

இந்த மருத்துவ முகாமில் 248 இரத்த அழுத்த நோயாளர்களும், 207 நீரிழிவு நோயாளர்களும் பரிசோதனை செய்யப்பட்டதுடன் 260 பேருக்கு பற் பரிசோதனையும் செய்யப்பட்டது.

மூன்று இரத்த அழுத்த நோயாளர்களும் இம்மருத்துவ முகாமில் கண்டுபிடிக்கப்பட்டனர்.

கண்பரிசோதனை செய்யப்பட்ட 272 பேரில் 48 பேருக்கு வெண்படலம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. யாழ் போதனா வைத்தியசாலையில் இவர்களுக்குச் சிகிச்சை அளிப்பதற்கும் ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

லயன்ஸ் கழகத் தலைவர் க. சற்குணநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த மருத்துவ முகாமில் வலயத் தலைவர் பி கமலநாதன் மற்றும் டாக்டர்கள் திருமதி கவிதா குலநாயகம், க. இளங்கோ ஞானியார், எஸ். எம். பெர்ணான்டோ உட்பட லயன்ஸ் கழக டாக்டர்களும் கலந்து கொண்டனர்.

(ஐ-5)

## யாழ். நகர வீதிகளைத் திருத்த ரூ. 1கோடி 57லட்சத்து 49ஆயிரம்

யாழ். நகரப்பகுதியில் உள்ள வீதிகளைப் புனரமைப்பதற்கென வடமாகாண மீள்குடியேற்ற, புனர் வாழ்வு, புனரமைப்பு அதிகார சபையினால் ஒரு கோடி 57 இலட்சத்து 49 ஆயிரம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

இந்த நிதியின் மூலம் நகரப் பகுதியில் உள்ள 29 வீதிகள் புனரமைக்கப்படவுள்ளன. வேலைகள் யாவும் வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் ஊடாக மேற்கொள்ளப்படவுள்ளன என்று யாழ். மாநகர சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

(இ-10)


## அரசாங்க அறிவித்தல்

**பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனை, சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.**

**தளபாடங்கள், உபகரணங்கள், கருவிகள், இயந்திர சாதனங்கள் வழங்கல்**

பிரதிமாகாணப்பணிப்பாளர் பணிமனைக்கு மரத் தளபாடங்கள், இரும்புருக்குத் தளபாடங்கள், உபகரணங்கள், கருவிகள், இயந்திர சாதனங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்கள் என்னால் 23—08—2000 ஆம் திகதி நண்பகல் 12. 00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்று பி.ப. 2.30 மணிக்குத் திறக்கப்படும். இதற்கான கேள்விப் பத்திரங்களைப் பெற விரும்புவோர் மீளளிக்கப்படாத பிணைப்பணமாக ரூபா 100 உம் மீளளிப்புடனான கேள்விக் கட்டுப்பணமாக ரூபா 5000உம் செலுத்தி 09—08—2000 முதல் இப் பணிமனையில் பெற்றுக்கொள்வதுடன், மாதிரிகளையும் பார்வையிடலாம்.

பழுவங்கள் 22—08—2000 பி. ப. 3. 00 மணிவரை வழங்கப்படும். இக் கேள்விப்பத்திர உறைகள் அரக்கு முத்திரை இடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் "பிரதி மாகாணப்பணிப்பாளர் பணிமனைக்குத் தளபாடங்கள், உபகரணங்கள், கருவிகள் இயந்திர சாதனங்கள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்" எனக்குறிப்பிடல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் திறக்கப்படும்போது கேள்விப்பத்திரதாரரும் சமுகமளிக்கலாம். ஏற்றுக்கொள்ளப்படும் கேள்விதாரர் ஒருமாத காலத்திற்குள் குறிப்பிட்ட பொருள்களைத் தாங்களே எடுத்து பணிமனையில் ஒப்படைக்க வேண்டும். மரத்தளபாடங்கள் யாவும் வேப்ப மரத்தினால் செய்யப்பட்டு இரு தடவைகள் வாணிஸ் பூசப்படல் வேண்டும். இரும்புருக்குத்தளபாடங்கள் அன்ரிகுறோஸ் அடித்து இரு தடவைகள் வர்ணம் பூசுதல் வேண்டும்.

மேலதிக விவரங்கள் தேவைப்படுவோர் பணிமனை நேரத்தில் எனது பணிமனையில் பெற்றுக்கொள்ளலாம்.

**வைத்திய கலாநிதி ஐ. சிவபாதசுந்தரம்**
பிரதி மாகாணப் பணிப்பாளர்,
சுகாதார சேவைகள், யாழ்ப்பாணம்.

இல. 46, மணிக்கூட்டுக்கோபுர வீதி,
யாழ்ப்பாணம்.

(ஒ/12433)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## தவறிவிட்டது

மீசாலை கிழக்கு, மீசாலை என்னும் முகவரியைச் சேர்ந்த சண்முகநாதன் இராகுலன் என்பவருடைய விசேட அடையாள அட்டை (091004707) வதிரிக்கும் கரவெட்டிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கரவெட்டி அஞ்சல் அலுவலகத்தில் ஒப்படைக்கவும். (77114)

கோப்பாய் வடக்கு, மத்தியைச் சேர்ந்த V.சகாயராணியின் விசேட அ.அட்டை (09030033003) V.பத்மா றோஸ்ஸின் விசேட அ.அட்டை (090303945) இரண்டும் கடந்த 03-08-2000 அன்று யாழ்.மத்திய பஸ் நிலையத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சலுசலா புடைவையகம், இல.19, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77119)

கல்வயல், சாவகச்சேரி என்னும் முகவரியைச் சேர்ந்த சிவராஜா சிவாநந்தினி என்பவரது விசேட அ.அட்டை (இல. 091025463) 07-08-2000 அன்று மானிப்பாய்க்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து கரன் ஜுவலர்ஸ், கன்னாதிட்டி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். (77120)

336, கண்டிவீதி, அரியாலையைச் சேர்ந்த அன்ரன் அன்ரனி றஞ்சித் என்பவரது விசேட அடையாள அட்டை (இல. 0902014070), (கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்) பாடசாலை அ.அ. என்பன 03-08-2000 அன்று நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கும் பழம் வீதிக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருநெல்வேலி கண்ணன் ஸ்ரோர்ஸில் அல்லது சவேரியார் பங்குத் தந்தையிடம் ஒப்படைத்து உதவவும். (77115)

## தவறிவிட்டது

துரைராஜாவீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மகாகணபதீஸ்வரக் குருக்கள் பாஸ்கரக்குருக்கள் என்பவரது தேசிய அ.அட்டை (இல.700861007V), விசேட அ.அட்டை என்பன ஆடியபாதம் வீதியடியில் 07-08-2000 அன்று தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து திருநெல்வேலி பத்திரகாளி அம்மன் கோயில் பரிபாலன சபை அலுவலகத்தில் ஒப்படைத்து உதவவும். (77118)

**Financial Management (F.Brigham -** எழுதியது) (யாழ். பல்கலைக்கழகத்தில் இரவல் பெறப்பட்டது) எனும் புத்தகம் முலவைச் சந்திக்கும் 106, இராசாவின்தோட்ட வீதியிலுள்ள வீட்டிற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்படி விலாசத்தில் ஒப்படைத்து உதவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (77116)

12/4, கென்னடி வீதி, நாவாந்துறை என்னும் முகவரியைச் சேர்ந்த மரியதாஸ் வெனிராஜ் என்பவரது தேசிய அ.அட்டை (813362112V) 14-07-2000 அன்று யாழ்ப்பாணத்திலிருந்து மூளாய் செல்லும் 786 இல. பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். (77128)

### கருத்தரங்கு

கற்றலை இலகுவாக்கல் தொடர்பான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ்ப்பாணம் விஞ்ஞானக்கழகத்தில் நடைபெறவுள்ளது. மாணவர்கள் எதிர்கொள்ளும் கற்றல் சம்பந்தமான பிரச்சினைகளை நிவர்த்தி செய்யும் வழிமுறைகள் பற்றி டாக்டர் இ.சிவசங்கர் கருத்துரை வழங்குவார். சுன்னாகம் றோட்டரக்கழகம் இக்கருத்தரங்கை ஏற்பாடு செய்துள்ளது. (ஐ-152)

# கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியா

**இரத்தினம் சுனேந்திரராசா (வாசன்)**

அவர்கள் 07-08-2000 திங்கட்கிழமை அன்று காலமானதையொட்டி அவர் மறைவினால் துயரில் ஆழ்ந்திருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தி பெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி. கிழக்கு தனியார்
சிற்றூர்திச் சேவைச் சங்கம்,
அச்சுவேலி.

(77126)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



| மண்ணில் | விண்ணில் |
|---|---|
| 1932 - 12 - 14 | 2000 - 07 - 10 |

**அமரர் த. திருநாவுக்கரசு (நாவேந்தன்)**

மூவேந்தர் தமிழ் குளித்து மூச்சுவிடும் சொல்லாளன்
முக்கனியின் சாற்றிலெமை மூழ்கடிக்கும் வல்லாளன்
பாவேந்தர் பரம்பரையில் படை நடத்தும் எல்லாளன்
பத்திரிகைத் துறை புகுந்து பகழியிடும் வில்லாளன்
சாவேந்தத் துணியவொணா சரித்திரத்துப் பெருந்தூணாய்
சாய்க்கவொணாதருண்டு சகத்திலெம பிருந்துவிட்டு
நாவேந்தன் நடந்திட்டான் நற்றமிழின் பிரவாகம்
நாவிட்டுப் போன தந்தோ நம்மன்னை நலியாளோ?

எமது குல முதல்வரின் மறைவு கேட்டு உடன் விரைந்து உதவியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்துகொண்டோருக்கும், நேரிலும், பத்திரிகை, ஒலி, ஒளி ஊடகங்களினூடாக அனுதாபச் செய்திகள் தந்தோருக்கும் எங்கள் உளமார்ந்த நன்றியினைத் தெரிவிக்கின்றோம்.

அன்னாரின் இல்லத்தில் இன்று (09-08-2000) புதன்கிழமை நடைபெறுகின்ற அந்தியேட்டி மற்றும் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளிலும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், அன்பர்கள் யாவரையும் அன்புடன் வேண்டுகிறோம்.

\- குடும்பத்தினர்

*70/1, வைமன் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (C/12438)

## திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கும் வாசுதேவ நாயக்கரின் 'ஒரு வடக்கன் வீரக்கதை' என்ற மலையாளத் திரைப்படம் காண்பிக்கப்படவுள்ளது.

எதிர்வரும் 12ஆம் திகதி சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை மண்டபத்தில் இத்திரைப்படம் காண்பிக்கப்படும். (ஐ-9)

**ஈசன் கல்வி நிலையம்**
கே. கே. எஸ் வீதி,
கோண்டாவில்

**A/L 2000**

**வணி-புள்ளிவிபரவியல் விசேட வகுப்புக்கள்**
திரு. த.தவசேகர் B.Sc.
* 10, 11, 14, 15, 16, 17 ஆம் திகதிகளில்
காலை 11-2 (S.L.T) வரை வகுப்புக்கள் நடைபெறும்.

NOTE:
பயிற்சிப் பரீட்சைக்குத் தோற்றியோர் தவிர்ந்த ஏனையோரிடம் கட்டணம் அறவிடப்படும். (77125)

**UNIVERSITY OF JAFFNA**
**COMMENCEMENT**
**SECOND SEMESTER**
POSTGRADUATE DIPOLMA IN PUBLIC ADMINISTRATION

The second semester of the Postgraduate Diploma in Public Administration will commence on 2000-08-16. Programme detail is available in the Faculty of Graduate Studies, University of Jaffna.

**REGISTRAR,**
University of Jaffna,
Thirunelvely. (C/12439)

# மகாபொல கொடுப்பனவு

யாழ்.பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீட மாணவர்களுக்கான மகாபொல கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன.

முதலாம் வருட மாணவர்களுக்கு இன்று புதன்கிழமையும் - இரண்டாம் வருட மாணவர்களுக்கு நாளை வியாழக்கிழமையும் - மூன்றாம் வருட மாணவர்களுக்கு எதிர்வரும் 11ஆம் திகதியும் - நான்காம் வருட 'ஏ' பிரிவு மாணவர்களுக்கு எதிர்வரும் 23ஆம் திகதியும் - 'பி' பிரிவு மாணவர்களுக்கு எதிர்வரும் 22ஆம் திகதியும் இக்கொடுப்பனவுகள் வழங்கப்படவுள்ளன. (க)

**R.V.G. BEEDIES**
**ஆர்.வி.ஜி பீடிகள்**

எமது ஸ்தாபனத்திற்கு பீடி உற்பத்திப் பொருள்கள் வந்து பீடி உற்பத்தி நடைபெறுவதால் கூடிய சீக்கிரத்தில் பீடி விற்பனைக்கு வரும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றோம.

ஆர்.வி.ஜீ. நிர்வாகம்,
நல்லூர்.

(77121)

# இதய அஞ்சலி

07-08-2000 அன்று சிவபதம் அடைந்த
ஓய்வு பெற்ற பேராசிரியர்
**பிரம்மஸ்ரீ கா.கைலாசநாதக்குருக்கள்**

அவர்களின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தனை செய்வதோடு, அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*சைவ பரிபாலன சபை,*
**யாழ்ப்பாணம்.**

(77124)

# 31 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1932 - 12 - 14 | 2000 - 07 - 10 |

**அமரர் த.திருநாவுக்கரசு (நாவேந்தன்)**
(ஓய்வு பெற்ற அதிபர்)

நாவுக்கரசே நம்மதிபரே நாவேந்தே
நால்மூன்றாண்டாக நன்கு பணிபுரிந்துதவிய
நம்முடனே நண்பரனைவரையும் நலியவிட்டு
நற்றமிழின் தொண்டை நடுவே நிறுத்தி விட்டு
நல்லுலகஞ் சேர்க்க நமன் துணிந்த காரணமென்
நம்துயரை நமனறியான் நல்லுலகே!
நாட்டாரே அறிந்திடுவீர்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

முன்னாள் அதிபரும்,
அன்னாருடன் கடமையாற்றிய ஆசிரியர்களும்,
*யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்.*

(C/12437)

# முயற்சி அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத் திறன் விருத்தி மையம்

**விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

| பயிற்சி நெறி | வேண்டப்படும் கல்வித் தகைமைகள் | |
|---|---|---|
| 1. வையறிங் றீவைண்டிங் | G.C.E. O/L கல்வி கற்றிருத்தல் | (கிழமைநாள் வகுப்பு) |
| 2. ரீ.வி., றேடியோ திருத்துதல | " " " | " " |
| 3. தையல் இயந்திரம் திருத்துதல் | " " " | (வார இறுதி நாள்கள்) |
| 4. புத்தகம் கட்டுதல் | " " " | " " |
| 5. உடையமைத்தல் | " " " | (கிழமைநாள் வகுப்பு) |
| 6. தமிழ் தட்டச்சு, சுருக்கெழுத்து | " தமிழ் C உட்பட ஆறுபாட சித்தி | " " |
| 7. தமிழ் தட்டச்சு | " " " | (வார இறுதி நாள்கள்) |
| 8. ஆங்கில தட்டச்சு | " ஆங்கிலம் C உட்பட ஆறுபாட சித்தி " | " |

* பயிற்சி நெறிகளுக்கு கட்டணம் அறவிடப்படமாட்டாது.

*பயிற்சி நெறிகள் நடைபெறும் இடங்கள்:*

* 1, 2, 3, 4, ஆகிய பயிற்சி நெறிகள் 106, 4 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் நடைபெறும்.

* 5, 6, 7, 8 ஆகிய பயிற்சி நெறிகள் TRRO உபகாரியாலயம், மானிப்பாய் வீதி, உரும்பிராய் என்னும் முகவரியில் நடைபெறும்.

*** விண்ணப்ப முடிவுதிகதி: 15-08-2000**

விண்ணப்பங்கள்:
*"செயலாளர், அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்",*
மானிப்பாய் வீதி, உரும்பிராய்
என்ற முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

\- நிர்வாகம்

(C/12403)



அரசமைப்புச் சட்டநகலின் 2ஆவது வாசிப்பு மீதான விவா தத்தின்போது ஐ.தே.க. உறுப்பினரான திருமதி ரேனுகா ஹேரத் நாடாளுமன்ற ஒழுங்குப் புத்தகத்தைக் கிழித்து எறிந்து ஆவேச மாகப் பேசிக்கொண்டிருக்கும் காட்சி.



அரசமைப்புச் சீர்திருத்த சட்டநகல் நாடாளுமன்றத்தில் சமர்ப் பிக்கப்பட்ட சமயம், அதில் கலந்துகொண்ட ஐ.தே.க. நாடாளு மன்ற பின்வரிசை உறுப்பினர் ஒருவர் நகலைத் தீயிட்டுக் கொளுத்தும் காட்சி.



அரசமைப்புச் சட்டநகலுக்கு ஆதரவாக தொழிற்சங்கங்கள், பொது அமைப்புக்கள் விகாரமாதேவி பூங்கா முன்பாக நடத்திய ஆர்ப்பாட்டத்தின்போது எடுக்கப்பட்ட படம். இந்த ஆர்ப்பாட்டத் தின்போது பலத்த பொலீஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது.

# நல்லூர் ஓய்வூதியரின் வவுச்சர்கள் வங்கிகளில்

வலி.கிழக்கு,ஓக9

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் ஓய்வூதியம் பெறுவோர் இம்மாதத்திற்கான தமது ஓய்வூதியத்தினை நாளை வியாழக்கிழமை தொடக்கம் தத்தமது ஓய்வூதியம் பெறும் வங்கிகளில் பெற்றுக்கொள்ளுமாறு நல்லூர் பிரதேச செயலர் க.குணராசா அறிவித்துள்ளார்.

இந்த ஓய்வூதியர்களின் பற்றுச்சீட்டுக்கள் இம்முறை அந்தந்த வங்கிகளில் வைத்தே வழங்கப்படவுள்ளதாகவும் ஓய்வூதியர்கள் தங்கள் வங்கிகளுக்குச் சென்று ஓய்வூதிய அட்டை, தேசிய அடையாள அட்டை முதலியவற்றைக் காண்பித்துப் பற்றுச்சீட்டைப் பெற்றுப் பூரணப்படுத்தி ஓய்வூதியத்தினைப் பெற்றுக்கொள்ளுமாறு அவர் மேலும் கேட்டுள்ளார். இதுவரை காலமும் ஓய்வூதியர்களின் பற்றுச்சீட்டுக்கள் தபால் மூலம் அனுப்பப்பட்டு வந்தன. ஆனால் தற்போதைய யுத்த சூழ்நிலை காரணமாக ஓய்வூதியர்கள் பலர் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் வசிப்பதனால் பற்றுச்சீட்டுக்கள் ஓய்வூதியர்களைச் சென்றடைவதில் ஏற்படும் தடங்கலையும் தாமதத்தையும் கருத்திற்கொண்டே இந்த மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஜ-180)

# விடைத்தாள் திருத்தும்பணி இரண்டு கட்டங்களாக!

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள்களைத் திருத்தும் பணி இருகட்டங்களாக இடம்பெறும்.

கொழும்பு மாவட்டத்துக்கான விடைத்தாள் திருத்தும் பணியின் முதலாவது கட்டம் எதிர்வரும் 17ஆம் திகதியில் இருந்து 30ஆம் திகதி வரையும் -

இரண்டாவது கட்டப் பணி எதிர்வரும் 31ஆம் திகதியில் இருந்து செப்ரெம்பர் 13ஆம் திகதிவரையும் - இடம்பெறும்.

* வெளிமாவட்டங்களுக்கான முதலாவது பணி எதிர்வரும் 19ஆம் திகதி முதல் செப்ரெம்பர் முதலாம் திகதிவரையும் -

இரண்டாம் கட்டப் பணி செப்ரெம்பர் 2ஆம் திகதி முதல் 10ஆம் திகதி வரையும் இடம்பெறும் என்று பரீட்சைத்திணைக்களம் தெரிவித்துள்ளது.

விடைத்தாள் திருத்தும் பணியில் சுமார் 10 ஆயிரம் ஆசிரியர்கள் ஈடுபடவுள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டது. (க-6)



அரசமைப்புச் சீர்திருத்த சட்டநகல் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தினத்தன்று இடம்பெற்ற 2ஆம் வாசிப்பு மீதான விவாதத்தின்போது கூச்சல், குழப்பங்கள் மத்தியில் ஜனாதிபதி பேசுவதைக் காணலாம்.

## வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி

மானிப்பாய் - சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் இன்றுமுதல் வளர்ப்பு நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளது. பின்வரும் தினங்களில் தவறாது ஊசியைப் போட்டுக்கொள்ளுமாறு மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பொறுப்பதிகாரி எஸ்.இராஜேந்திரா அறிவித்துள்ளார்.

### புதன்கிழமை

★ 9 மணி - பண்டத்தரிப்பு - புனித அந்தோனியார் சனசமூக நிலையம்.

★ 10 மணி - சில்லாலை கிராம முன்னேற்றச் சங்கம்.

★ 11 மணி - மாதகல் தரிசிப்பு வைத்தியசாலை.

★ 12 மணி - சகாயபுரம் கிராம முன்னேற்றச் சங்கம்.

### வியாழக்கிழமை

★ 9 மணி - சுதுமலை(குண்டடி) மத்தி சனசமூக நிலையம்.

★ 10 மணி - சுதுமலை வடக்கு நாமகள் சனசமூக நிலையம்.

★ 11 மணி - ஆனைக்கோட்டை சங்கரப்பிள்ளை சனசமூக நிலையம்.

### 16-08-2000

★ 9 மணி - நவாலி மணி மண்டபம்.

★ 10 மணி - நவாலி வை.எம்.சீ.ஏ.

★ 11 மணி - நவாலி வடக்கு சனசமூக நிலையம்.

★ 12 மணி - நவாலி தெற்கு மதிஒளி சனசமூக நிலையம்.

### 28-08-2000

★ 9 மணி - மாகியப்பிட்டி சூரியோதய சனசமூக நிலையம்.

★ 10 மணி - சண்டிலிப்பாய் வடக்கு சனசமூக நிலையம்.

★ 11 மணி - சண்டிலிப்பாய் ஆலங்குழாய் சனசமூக நிலையம்.

★ 12 மணி - சண்டிலிப்பாய் - பிரதேச செயலகம் அருகில்.(ஜ-185)

## புலிகள் தரப்பில் நால்வர் உயிரிழப்பு

இம்மாதம் இடம்பெற்ற சில சம்பவங்களில் தமது தரப்பில் நால்வர் உயிரிழந்தாகப் 'புலிகளின்குரல்' வானொலி நேற்றுமுன்தினம் அறிவித்தது.

கடந்த 2ஆம் திகதி கிளாலிப் பகுதியில் இடம்பெற்ற மோதலின் போது மேஜர் அறிவுமணி (தெய்வேந்திரம் மன்மதநாதன் - யாழ்ப்பாணம்) என்பவரும் -

கடந்த 5ஆம் திகதி முல்லைத்தீவில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் மேஜர் வெண்நிலா (ஜீவோய்ஸ் எடினா யுபொக்ஷி- யாழ்ப்பாணம்), லெப்டினட் மலைமகள் (தம்பிராசா ஜமுனா - யாழ்ப்பாணம்) ஆகியோரும் -

கடந்த 6ஆம் திகதி நாவற்குழியில் இடம்பெற்ற மோதலின்போது லெப்டினன்ட் அமுதினி (ஜீவரட்ணம் சயப்பிரியா - மட்டக்களப்பு) என்பவரும் - உயிரிழந்ததாகப் புலிகள் அறிவித்துள்ளனர். (ஜ-4)

## மிதிவெடியில் சிக்கியவர் மரணம்

விறகு எடுக்கச் சென்ற இடத்தில் மிதிவெடியில் சிக்குண்டு படுகாயமடைந்த நிலையில் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவர் நேற்றுமுன்தினமிரவு அங்கு மரணமானார்.

கட்டுவன் பகுதியில் நேற்றுமுன்தினம் காலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் அச்சுவேலி வடக்கைச் சேர்ந்தவரும் கந்தரோடையில் வசிப்பவருமாகிய இரத்தினம் சுவேந்திரராசா (வயது 22) என்பவரே உயிரிழந்தவராவார். (ஜ-15)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஓக.9

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்குப் பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 8ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

### சங்கானை

| | |
|---|---|
| 513/130746/A | 513/130746/B |
| 513/130746/C | 513/144043/A |
| 513/146392/A | 513/146392/B |
| 513/146392/C | 513/146392/D |
| 513/146429/A | 513/146429/B |
| 513/146429/C | 513/146429/D |
| 513/146429/E | 513/146429/F |
| 513/146429/G | 513/146454/A |
| 513/146998/A | 513/146998/B |
| 513/147149/A | 513/147431/A |
| 513/150467/A | 513/150467/B |
| 513/150467/C | 513/150467/D |
| 513/150467/E | 513/150478/A |
| 513/150478/B | 513/150478/C |
| 513/150478/D | 513/150541/A |
| 513/150541/B | 513/150554/A |
| 513/150572/A | 513/150577/A |
| 513/150577/B | 513/150593/A |
| 513/150593/B | 513/150593/C |
| 513/150738/A | 513/150776/A |
| 513/150776/B | 513/150776/C |
| 513/150776/D | 513/150805/A |
| 513/151869/A | 513/151869/B |
| 513/153222/A | 513/153222/B |
| 513/153283/A | 513/153283/B |
| 513/153283/C | 513/153283/D |
| 513/153283/E | 513/153382/A |
| 513/153382/B | 513/153382/C |
| 513/153382/D | 513/153382/E |
| 513/153382/F | |

### நல்லூர்

| | |
|---|---|
| 513/143818/A | 513/146310/A |
| 513/146310/B | 513/146310/C |
| 513/146458/A | 513/146458/B |
| 513/146492/A | 513/146492/B |
| 513/146492/C | 513/150326/A |
| 513/150403/A | 513/150403/B |
| 513/150460/A | 513/150472/A |
| 513/150472/B | 513/150477/A |
| 513/150477/B | 513/150529/A |
| 513/150687/A | 513/150687/B |
| 513/150784/A | 513/151759/A |
| 513/151759/B | 513/151766/A |
| 513/151766/B | 513/151848/A |
| 513/151848/B | 513/151848/C |
| 513/152539/A | 513/152539/B |

### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/129311/A | 513/129311/B |
| 513/135775/A | 513/138137/A |
| 513/138137/B | 513/141743/A |
| 513/141743/B | 513/143982/A |
| 513/143982/B | 513/143982/C |
| 513/146330/A | 513/147382/A |
| 513/148264/A | 513/148274/A |
| 513/148274/B | 513/148274/C |
| 513/150331/A | 513/150348/A |
| 513/150444/A | 513/150503/A |
| 513/150503/B | 513/150503/C |
| 513/150503/D | 513/150531/A |
| 513/150531/B | 513/150531/C |
| 513/150531/D | 513/150531/E |
| 513/150549/A | 513/150579/A |
| 513/150582/A | 513/150582/B |
| 513/150605/A | 513/150605/B |
| 513/150605/C | 513/150631/A |
| 513/150631/B | 513/150669/A |
| 513/150676/A | 513/150676/B |
| 513/150681/A | 513/150688/A |
| 513/150715/A | 513/150722/A |
| 513/150722/B | 513/150726/A |
| 513/150729/A | 513/150729/B |
| 513/150729/C | 513/150729/D |
| 513/150729/E | 513/150729/F |
| 513/150729/G | 513/150740/A |
| 513/150751/A | 513/150751/B |
| 513/150751/C | 513/150801/A |
| 513/150801/B | 513/151790/A |
| 513/151790/B | 513/151831/A |
| 513/151834/A | 513/151834/B |
| 513/151849/A | 513/151849/B |
| 513/152541/A | 513/152541/B |
| 513/153290/A | 513/153290/B |

### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/143808/A | 513/150336/A |
| 513/150370/A | 513/150370/B |
| 513/150513/A | 513/150513/B |
| 513/150514/A | 513/150514/B |
| 513/150514/C | 513/150514/D |
| 513/150520/A | 513/150765/A |
| 513/150767/A | 513/150767/B |
| 513/150768/A | 513/150785/A |

### உடுவில்

| | |
|---|---|
| 511/144969/A | 511/144969/B |
| 513/138277/A | 513/138277/B |
| 513/138277/C | 513/138277/D |
| 513/141725/A | 513/141725/B |
| 513/143849/A | 513/143849/B |
| 513/143874/A | 513/143874/B |
| 513/143874/C | 513/143907/A |
| 513/143907/B | 513/146298/A |
| 513/146337/A | 513/146337/B |
| 513/146337/C | 513/146359/A |
| 513/146359/B | 513/146359/C |
| 513/146403/A | 513/146403/B |
| 513/150319/A | 513/150397/A |
| 513/150398/A | 513/150446/A |
| 513/150446/B | 513/150446/C |
| 513/150446/D | 513/150571/A |
| 513/150571/B | 513/150591/A |
| 513/150615/A | 513/150615/B |
| 513/150648/A | 513/150692/A |
| 513/150692/B | 513/150697/A |
| 513/150697/B | 513/150697/C |
| 513/150697/D | 513/150710/A |
| 513/150777/A | 513/150780/A |
| 513/151773/A | 513/151846/A |
| 513/151846/B | 513/151846/C |
| 513/151846/D | 513/151886/A |
| 513/152540/A | 513/152540/B |
| 513/153291/A | 513/153471/A |
| 513/153471/B | 513/153471/C |
| 513/153495/A | 513/153495/B |

## புலமைப்பரிசில் பரீட்சை விடைகள்

நேற்று முன்தினம் 'உதயன்' பத்திரிகையில் வெளியான புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.8 இன் விடைகள் வருமாறு:-

### பகுதி I

(1-6) மாணவர்களின் தொழிற்பாட்டுக்கு விடுக.
(7) சந்தனம் (8)சுத்தம் (9)வீரன்
(10) பருத்தி (11)அரும்பு
(12) சந்திரன் (13)1 (14)1
(15) 25 நாள்கள்
(16) மூவரும் சமனான நேரத்தில் வாசிப்பர்.
(17) வடக்கு
(18) 5 ரூபா நாணயத்தில்-2; ஒரு ரூபா நாணயத்தில்-1; 25சத நாணயத்தில்-1
(19) 17ஆம் திகதி (20)3 (21)1
(22) 2 (23)3 (24)x (25)o (26)x
(27) o (28)iv (29)iii (30)iv (31)ii
(32) i (33)பி (34)பி (35)ச
(36) ச
(37) ஏர்மங்கலம் (38)அறைகூவல்
(39) அரங்கேற்றம்
(40) தேன் இறால் (தேன் வதை)

### பகுதி II


(1) திருமதி மதுரா மதுரலிங்கம்.
(2) 'அன்னை இல்லம்', உடையார் வீதி, தெல்லிப்பழை.
(3) ஓமான் (4)தாதித்தொழில்
(5) மு.ப 12.45 (6)அமெரிக்கா
(7) CI 416 (8)10,496 ரூபா
(9) 11,200 ரூபா (10)4,200 ரூபா
(11) 28,000 ரூபா
(12) கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில்.
(13) ஸ்ரீலங்கன் ஏயர் விமானசேவை.
(14) வெண்ணிலாவே
(15) ஓடம்போல (16)குளிக்கும்
(17) பாற்கடலும்
(18) உன்னையென்று
(19) அஞ்சினையோ
(20) உன்னுருவில்
(21) இருப்பதேனோ
(22) பறக்கச் (23)சேருவேனே
(24) உ (25)அ (26)ஈ (27)ஆ
(28) இ (29)நிருதிமூலை
(30) வாயுமூலை (31)6 மீற்றர்
(32) ரூ.274.50
(33) 5,280 ரூபா; ஐயாயிரத்து இருநூற்று எண்பது.
(34) 12 மீற்றர் (35)840 ரூபா
(36) வேட்பாளர் (37)வங்கி
(38) நட்டஈடு (39) தீர்க்கதரிசி
(40) ஆகாயத்தோட்டி
(41) நுகர்வோர் (42)3 (43)2
(44) 1
(45) சிறகுகள் இல்லாவிட்டால் பறவைகளால் பறக்க முடியாது.
(46) தேர் ஓடுவதற்கு சில்லுகள் அவசியமானவை.
(47) வாழை இலை,பூ,மடல்,காய், பழம் என்பன தந்து உதவுகிறது.
(48) தாவரங்கள் முளைப்பதற்கு வித்துக்கள் அவசியமானவை.
(49) குடை மனிதரை மழையிலும் வெயிலிலும் இருந்து பாதுகாக்கிறது.
(50) கோழி முட்டை இட்டுக் குஞ்சு பொரிக்கும்.

## மண்ணெண்ணெய் விநியோகம்

வலி.தெற்கு,ஓக.9

மானிப்பாய் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைகளூடாக இவ்வாரம் முதல் பங்கீட்டு அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் விநியோகிக்கப்படுகின்றது.

ஒவ்வொரு பங்கீட்டு அட்டைக்கும் தலா ஐந்து லீற்றர் எண்ணெய் வழங்கப்படுவதாக ப.நோ.கூ.சங்கத் தலைவர் மா.செல்வராசா தெரிவித்துள்ளார். (ஜ-152)




அரசமைப்புச் சீர்திருத்தச் சட்டத்தைக் கொண்டுவருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துவருவது குறித்து 'சண்டே லீடர்' ஆங்கில வாரப் பத்திரிகையில் (06-08-2000இல்) வெளியான கருத்துப்படம் இங்கு மறுபிரசுரம் செய்யப்படுகிறது.

## தடுமாற்றத்துடன்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுமுன்தினமிரவு அவர் தமது வீட்டில் ஏற்பாடு செய்திருந்த இரவு விருந்துபசாரத்துக்கு சகல நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அழைத்திருந்தார்.

அங்கு இரவு விருந்து முடிந்ததும், தயார் நிலையில் வைத்திருந்த வாகனங்களில் அந்தப் 10 பேரும் ஏற்றப்பட்டனராம்.

அங்கிருந்து நேரடியாக அவர்கள் விமான நிலையத்துக்கு கூட்டிச் செல்லப்பட்டனர். பல எம்.பிக்களுக்கு அங்கு சென்ற பின்பே தாம் சிங்கப்பூர் செல்லும் விடயம் தெரிய வந்ததாம். ஐ.தே.கவின் மூத்த தலைவர்களில் ஒருவரான ஜோன் அமரதுங்க இந்த உறுப்பினர்களை அழைத்துச்சென்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான திருமதி இராஜமனோகரி புலேந்திரன், வி.புத்திரசிகாமணி, அப்துல் காதர், வி.பி.ஜினதாச, அலிசாகிர் மௌலானா, யூசுப் லெப்பை மொகமட், மகிந்த சமரசிங்க, உபாலி அமரசிறி, ஜோன் அமரதுங்க ஆகியோர் சிங்கப்பூருக்கும் - டினேஸ் தொடங்கொட பாங்கொக்கும்- அனுப்பப்பட்டனர்.

இணுவில்
பொருளியல்-S.வரதராஜன்
**A/L 2001**
பாட அலகு - 5
பணமும் வங்கியும
*செவ்., வியா. 3.30 - 4.30*
பாட அலகு - 6
சர்வதேசப் பொருளியல்
*செவ்., வியா. 4.30 - 5.30*
ஆரம்பம்:- 10-08-2000
குறிப்பு:-
15-08-2000 செவ்வாய்க்கு பின்பு இப்பாட அலகுக்குப் புதிய அனுமதிகள் வழங்கப்படமாட்டாது.
பொருளியற் கல்லூரி
K.K.S. வீதி, இணுவில்.
(77129)

**பொருளியல்**
**A/L 2001**
பகுதி II
பணமும் வங்கியியலும்
ஆரம்பம்:- 12-08-2K
*சனி காலை 10.30 மணி*
**SUBRA (14)**
**கல்வி நிறுவனம்**
சிந்தனர்கேணி.
(77134)

**பாராட்டுகளும் வாழ்த்துகளும்**
ஈழத்தின் இலக்கிய வானில் சுடரெனத் திகழும் எழுத்தாளரும், நல்லூர்ப் பிரதேச செயலருமான
செங்கை ஆழியான்
**கலாநிதி க.குணராசா**
அவர்கள் அண்மையில் தென்னிந்திய சஞ்சிகை கலைமகள் நடத்திய குறுநாவல் போட்டியில் முதற் பரிசு பெற்ற *'மீண்டும் ஒரு சீதை'*யைப் படைத்து ஈழத்து எழுத்தாளர்களுக்குப் பெருமை சேர்த்துள்ளார். அவரைப் பாராட்டி வாழ்த்துவதில் நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகின்றோம். அவர்களுக்கு எமது வாழ்த்துக்கள்
யாழ். மாவட்ட கிராம சேவையாளர் சங்கம்,
யாழ்ப்பாணம்.
*பதிவு இல. T.V.2513*
(77140)

**A/L 2000**
**வணிகப் புள்ளி விபரவியல் விசேட வகுப்புகள்**
த. தவசேகர் B.Sc.
* 10ஆம், 11ஆம், 14ஆம், 15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் காலை 8-11 (ப.நே.) வரை வகுப்புகள்.
* எமது நிறுவனத்தில் வணிகப்புள்ளி விபரவியல் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றியோரிடம் கட்டணம் அறவிடப்படமாட்டாது.
**D.M.I**
யாழ்நகர்.
(C/12428)

**2000 புலமைப் பரிசில் தரம் - 5**
*பெற்றோர்களே....!*
உங்கள் பிள்ளைகள் இதுவரை பல வினாப்பத்திரங்களைச் செய்திருப்பர். ஆனால் இறுதிப்பரீட்சை வினாப்பத்திரத்தில் கோட்டைவிடும் மாணவர்கள் ஏராளம். இக்குறையை நிவர்த்திசெய்ய
*பரீட்சையில் என்ன செய்யவேண்டும்!!*
என்பதுபற்றி அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் கருத்துரை வழங்குவர். தவறாது அனைத்துத் தரம் 5 மாணவர்களையும் சமுகமளிக்கச் செய்யுங்கள்.
காலம்:- 11-08-2000 3.00 p.m. (வெள்ளி)
*ரூபா 15/- கொண்டுவரவும்.*
**சயன்ஸ் அக்கடமி**
நல்லூர்.
* 2001, 2002 கலை, வர்த்தக வகுப்புகள் வழமைபோல சனிக்கிழமை வழமைபோல.
(77141)

## திருமலையில் ஆர்ப்பாட்டம்

திருகோணமலை,ஓக.9

அரசமைப்புச் சீர்திருத்தச் சட்ட நகலுக்கு எதிர்ப்புத் தெரிவித்து திருகோணமலை மத்திய சந்தைக்கு அண்மையில் நேற்றுக்காலை ஆர்ப்பாட்டம் ஒன்று நடத்தப்பட்டது. (இ-3)

## மற்றொரு......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ளில் தட்டி கூச்சல் போட்டனர்.

"25 லட்சம் ரூபாவுக்கும், வீட்டுக்கும், பஜிரோவுக்கும் ஆசைப்பட்டவரே மேர்வின் டி சில்வா" என்று ஐ.தே.க. உறுப்பினர் ஒருவர் குரல் எழுப்பினார்.

அரசில் நேற்றுமுன்தினம் இணைந்த புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான ஹரேந்திர கொரியா பேசிய சமயமும் ஐ.தே.க. உறுப்பினர்கள் அவரைப் பேசவிடாது குரல் எழுப்பிக்கொண்டிருந்தனர்.

வாங்கிய 25 லட்சம் வங்கியில் போட்டு விட்டீரா? அன்பளிப்பாகப் பெற்ற பஜிரோவில்தான் வந்தீரா? என்று அவர்கள் கோஷம் எழுப்பிய வண்ணம் இருந்தனர்.

இதே சமயம் - பொதுமக்கள் ஐக்கிய முன்னணியில் இருந்து விலகி ஐ.தே.கவில் நேற்றுமுன்தினம் இணைந்த கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டிக்ஸன் பெரேரா நேற்றுக்காலை லண்டன் புறப்பட்டுச் சென்றுவிட்டார்.

நேற்றுக்காலை ஆரம்பமான விவாதம் நேற்று மாலை 4.30 மணிக்கு ஒத்திவைக்கப்படும்வரை ஐ.தே.கவினர் கூச்சலிட்டவாறே இருந்தனர். சபை நிகழ்வுகள் அமளிதுமளியாக இடம்பெற்றன. நேற்றைய விவாதத்தில் ஐ.தே.கட்சியைச் சேர்ந்த எந்த ஓர் உறுப்பினரும் உரையாற்றவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-4-7)

ஷண்ணின்
இன்றைய புதிய வீடியோ CDவெளியீடுகள்!
* ரம்யாகிருஷ்ணன் - சாகார்
நடிப்பில
*அம்மன் கோயில் குழந்தை*
(போஸ்ரர் இலவசம்)
* அப்பாஸ் - மீனா
*நடித்த*
*வீரவம்சம்*
(வீடியோ கடை உரிமையாளர்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளலாம்)
* புதிய ஆங்கிலத் திரைப்பட CDகள் விற்பனைக்கு உண்டு.
* புதிய பக்திப் பாடல் ஓடியோ CDகளும் விற்பனைக்கு உண்டு.
ஷண் றெக்கோடிங் ஸ்பொட்
24/2,பெரியகடை,யாழ்.
(77142)

இன்றைய
வீடியோ CD வெளியீடு!
*விஜயகாந்த் - குஷ்பு*
நடித்த
* சிம்மாசனம்
மூர்த்தி
வீடியோசென்ரா
மானிப்பாய்.
(C/12445) T. P. No. - 2884

இன்றைய வீடியோ CD வெளியீடு!
*அப்பாஸ் - மீனா*
*நடித்த*
* *வீரவம்சம்*
* *'ஸ்ரார் நைட் - 2000'*
*இசை நிகழ்ச்சி*
*(ராஜீசுந்தரம், சிம்ரான், விவேக், சுவலட்சுமி மற்றும் பலர்)*
ஓடியோ C.D.
வெளியீடு!
* *சிம்மாசனம்*
* பெண்ணின்
*மனதைத் தொட்டு*
விஷ்ணு வீடியோ
*கே.கே.எஸ். வீதி,*
*கோண்டாவில்.*
(C/12444)

## அலவியின்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கார் இனந்தெரியாதவர்களின் தாக்குதலுக்கு இலக்கானது.

அமைச்சர் சென்றுகொண்டிருந்த கார் நாடாளுமன்றச் சுற்றுவட்டத்தில் பொல்லுகள், தடிகளுடன் நின்ற சிலரால் மறிக்கப்பட்டதாகவும் - அவர்கள் வாகனத்தை தாக்கிச் சேதமாக்கியதாகவும் -

கடும் வார்த்தைகளால் அமைச்சரை அவர்கள் ஏசியதாகவும் - தெரிவிக்கப்பட்டது.

"என்னைத் தாக்குவதன் மூலம் பெரும் குழப்பம் ஒன்றை ஏற்படுத்த ஐ.தே.கவினரும், ஜே.வி.பியினரும் முயன்றனர். நான் சாதுரியமாகச் செயற்பட்டதால் மோதல் தவிர்க்கப்பட்டது" என்று அமைச்சர் நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

## தேர்தல் திருத்த.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவாதமும், வாக்கெடுப்பும் நாளை இடம் பெறும் என தெரிவிக்கப்பட்டிருந்தது.

தற்போது உள்ள சூழ்நிலையில் அதற்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைப்பது சந்தேகம் எனச் சுட்டிக்காட்டப்பட்டதாலேயே அதுவும் பிற்போடப்பட்டதாக அறியவந்தது.

இன்று முதல் அடுத்த ஐந்து தினங்களுக்கு நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட வேண்டிய விவகாரங்கள் தொடர்பாக நிகழ்ச்சி நிரல் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் நேற்று முடிவு எடுக்கப்பட்டதாகவும்-

அந்த நிகழ்ச்சி நிரலில் இந்த சட்ட மூல விவகாரம் இடம்பெறவில்லை என்றும் - தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## அரசமைப்பு சீர.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை நிறைவேற்றத் தேவையான 150 வாக்குகளை பெறுவதை உறுதி செய்த பின்பே மீண்டும் இந்த விடயத்தை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரவேண்டும் என்று சிரேஷ்ட அமைச்சர்கள் அரச உயர் மட்டத்துக்குச் சுட்டிக்காட்டியுள்ளதாக தெரியவந்தது.

நேற்று ஏற்பட்ட நிலைமை மாதிரி மீண்டும் ஏற்பட்டு அரசு மீதான நம்பகத் தன்மை இழக்கப்படுவதை அனுமதிக்கக்கூடாது என்றும் -

நகலை நிறைவேற்றக்கூடிய சரியான சூழ்நிலை ஏற்பட்டால் மட்டுமே மீண்டும் அதை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவரவேண்டும் என்றும் - அவர்கள் தெரிவித்துள்ளனர்.

தற்போதுள்ள சூழ்நிலையில் தேர்தல் நெருங்குவதால் சட்ட நகலை அடுத்த நாடாளுமன்றத்துக்கு கொண்டு செல்வதே சிறந்ததாக இருக்கும் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (இ-3)

## அரசமைப்பு.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமர்ப்பிக்கப்பட்டது. அதன் 2ஆவது வாசிப்பு மீதான விவாதம் நேற்று முன்தினம் ஆரம்பமாகியது. அந்த விவாதம் நேற்றுப்பிற்பகல்வரை தொடர்ந்து நடைபெற்று வாக்கெடுப்பு நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால் நேற்றுப்பிற்பகலில் விவாதம் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கையில், அதனை ஒத்திவைக்கக்கோரும் பிரேரணையை சபை முதல்வர் அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்தார். அதன் பிரகாரம் விவாதமும் வாக்கெடுப்பும் திகதி குறிப்பிடாமல் - கால வரையறை எதுவுமின்றி - ஒத்திவைக்கப்பட்டன.

நேற்றுக்காலை விவாதம் ஆரம்பமாவதற்கு முன்னர், நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களுக்கான கூட்டம் சபாநாயகர் கே.பி.ரட்ணாயக்கா தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் பங்குபற்றிய கட்சித் தலைவர்கள் பலர் தமது கட்சிகள் தரப்பில் விவாதத்தில் உரையாற்ற அதிக நேரம் ஒதுக்கவேண்டும் எனக் கோரினர்.

இந்த விடயத்தில் பெரும் வாக்குவாதம் இடம்பெற்றுக்கொண்டிருந்தது. அப்பொழுது சபை முதல்வரும் அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்க அரசமைப்பு நகல் மீதான விவாதம் பிற்பகல் 4.30 மணியுடன் ஒத்திவைக்கப்படும் என்று அறிவித்தார்.

அங்கு சமுகமளித்திருந்த ஐ.தே.க. தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் அக்கட்சித் தலைவர்களில் ஒருவரான லொக்கு பண்டாவும் கைதட்டி உரக்கச் சிரித்தனர். கட்சித் தலைவர்கள் கூட்டம் முடிவடைந்து சபையில் விவாதம் ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருந்தது. கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கு இணங்க பிற்பகல் 4.30 மணியளவில் விவாதம் ஒத்திவைக்கப்படுவதாகத் தெரிவிக்கும் பிரேரணை ஒன்றை அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க சமர்ப்பித்தார்.

ஐ.தே.க. உறுப்பினர்கள் கரகோஷம் செய்து அந்தப் பிரேரணையை வரவேற்றனர்.

ஒத்திவைப்புப் பிரேரணையைச் சமர்ப்பித்து உரையாற்றிய அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவித்தாவது:-

இரண்டு முக்கிய காரணங்களைக் கருதி விவாதத்தை ஒத்திவைக்கிறோம். விவாதத்தில் கலந்து பேசுவதற்கு 40 எம்.பிக்கள் அனுமதி கோரியுள்ளனர். அவர்களுக்குப் பேச சந்தர்ப்பம் வழங்கவேண்டும். அது முதலாவது காரணம்.

தமிழ்க்கட்சிகள் அறுபதுக்கும் மேற்பட்ட திருத்தங்களைச் சமர்ப்பித்துள்ளன. அவற்றைப் பரிசீலனை செய்து நகலில் இடம்பெறச் செய்வது தொடர்பாக ஆராய வேண்டும். அது இரண்டாவது காரணம்.

இக்காரணங்களால் விவாதத்தை ஒத்திவைத்து பின்னர் ஒருநாளில் அதனைத் தொடர்வதற்கு அரசு தீர்மானித்துள்ளது - என்றார் அவர்.

அதைத் தொடர்ந்து சபை ஒத்திவைக்கப்படுவதாகச் சபாநாயகர் அறிவித்தார். (அ-3-4-7)

பேராசிரியர் கா. கைலாசநாதக்குருக்கள்
அவர்களின் மறைவையொட்டிய
**அஞ்சலிக் கூட்டம்**
சமஸ்கிருத விற்பனரும், யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவருமாக விளங்கிய
**பேராசிரியர் கா.கைலாசநாதக்குருக்களுக்கு**
சர்வதேச இந்துமத குருபீடம் ஆதரவில்
அஞ்சலிக் கூட்டம் நடைபெறும்.
இடம்:- கமலா மோடி மண்டபம், கொழும்பு-13
(Mody Hall)
காலம்:- நாளை (10-08-2000) வியாழக்கிழமை
*மு.ப. 10.30 மணி தொடக்கம் நண்பகல் 12.30 மணிவரை.*
தலைவர்:- சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடாதிபதி
கலாநிதி ஸ்ரீஐயப்பதாசன் சாம்பசிவ சிவாச்சாரியார்.
*அஞ்சலியுரை நிகழ்த்துவோர்:*
* கப்பித்தாவத்தை பிரம்மஸ்ரீ பா.சண்முகரத்தின சர்மா
* பொன்னம்பலவாணேஸ்வரர் ஆலயப் பிரதம குரு சிவஸ்ரீ சி. குஞ்சிதபாதக்குருக்கள் * வித்துவான திருமதி வசந்தா வைத்தியநாதன் * திருமதி விஜயலஷ்மி சிவச்சந்திரன் (யாழ். பல்கலைக்கழகம்) * சிவஸ்ரீ விஸ்வநாராயணசர்மா (துர்க்கா குருகுல அதிபர்) * கலாநிதி கணேசபாபதி நாகேஸ்வரன் (சப்பிரகமுவ பல்கலைக்கழகம்) * திரு. வி.என்.மதியழகன் (பிரதிப் பணிப்பாளர் நாயகம், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்).
*அமரரின் மாணவர்கள், சிவாச்சாரியார்கள், அன்பர்கள், நண்பர்களை அழைக்கின்றோம்.*
**- சர்வதேச இந்துமத குருபீடம்.**
*90/22, ஜோசப் டயஸ் ஒழுங்கை,*
*கொழும்பு - 13.*
(C/12446)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 09-08-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.